விலை: 30.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-7348)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 21 திங்கட்கிழமை (06.01.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 18

## கைதான ரஞ்சன் ராமநாயக்க பிணையில் விடுதலையானார்

### வெளிநாடு செல்ல நீதிமன்றம் தடை

(கொழும்பு)
ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்ட ரஞ்சன் ராமநாயக்க நேற்று 23

பருத்தித்துறையில் நீராடச் சென்ற

## கிளிநொச்சியை சேர்ந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கரணவாய்)
பருத்தித்துறை முனை கடலில் குளிக்கச் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்ததாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 23

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு பெற

# இந்தியா, சர்வதேசத்தின் உதவியுடன் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கப்படும்

### கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்



**(கொழும்பு) தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை நாம் பெற்றுக் கொள்வதற்கு இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் உதவியை நாடி இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துளளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் கூட்டமைப்பின் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதற்கு தற்போது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அனைவரும் ஒற்றுமையுடன் ஓரணியில் பயணிக்க வேண்டும்.

எமக்குள் கருத்து முரண்பாடுகள் இருந்தால் அது தொடர்பில் பேசித் தீர்க்கலாம். அதைவிடுத்து, தொடர்ந்தும் முரண்பாடுகளை வளர்ப்பது அர்த்தமற்றது.

தமிழ் மக்கள் தொடர்ந்து எங்கள் தலைமையின் கீழ் ஒன்றாக நிற்கின்றார்கள், ஒரே கொள்கையுடன் நிற்கின்றார்கள் என்பதை விரைவில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் உறுதிப்படுத்த வேண்டும் என்று இரா. சம்பந்தன் தெரிவித்தார். (ம-3)

## வவுனியாவில் கிணற்றிலிருந்து மூதாட்டியின் சடலம் மீட்பு

(வவுனியா)
வவுனியா மகாறம்பைகுளம் புளியடிப் பகுதியில் கிணற்றுக்குள் இருந்து மூதாட்டி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை குறித்த மூதாட்டியை காணாத நிலையில் அவரது உறவினர்கள் தேடியுள்ளனர்.

இதன்போது வீட்டிற்கு அண்மையில் உள்ள விவசாயக் கிணறு ஒன்றில் அவர் சடலமாக காணப்பட்டமை கண் 23

## இனப்பிரச்சினையைத் தீர்க்க புதிய அரசியலமைப்பை உருவாக்குக

### கோட்டாவிடம் சம்பந்தன் வலியுறுத்தினார்; மாவை எம்.பி விளக்கம்

(கொழும்பு)
இலங்கையில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வினைக் காணும் வகையிலான புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்க வேண்டும் என ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந் 23

## கோட்டாவின் நேரடிக் கண்காணிப்பில் 12 விடயங்கள் உடன் அமுல்படுத்தப்பட்டது

### மக்களோடு மக்களாக 2,500 பொலிஸார் அவதானிப்பு

(கொழும்பு)
ஜனாதிபதி கோட்டாவின் நேரடிக் கண்காணிப்பில் 12 விடயங்கள் உடன் அமுலுக்கு வரும் வகையில் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

1. குடிபோதையில் வாகனம் செலுத்தி விபத்து ஏற்பட்டால் 10 வருட கடூழியச் சிறை.
2. முச்சக்கரவண்டிகள் இறக்குமதி செய்வது முற்றாகத் தடை.
3. பாடசாலை அனுமதியின் போது 23

## கட்டுப்பாட்டை இழந்த மோ.சைக்கிள் விபத்து

### இளைஞன் ஸ்தலத்திலேயே பலி முறிகண்டிப் பகுதியில் சம்பவம்

(முறிகண்டி)
வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் இளை 23

## தவறான பாதையில் பொலிஸார் இதில் எனக்கு உடன்பாடில்லை

### ரஞ்சன் ராமநாயக்க கைது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர

(கொழும்பு)
பொலிஸாரின் தற்போதைய நடவடிக்கைகளுக்கு எனக்கு உடன்பாடு இல்லை என தேயிலைத் தொழில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் 23

## சில நாட்களுக்கு வெப்பத்துடனான காலநிலை நீடிக்கும்

(கொழும்பு)
எதிர்வரும் சில தினங்களுக்கு வெப்பத்துடனான காலநிலை நிலவக்கூடும்என வளிமண்டலவியல் திணைக்களம் 23

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரதமராவதை தடுக்க முடியாது

### ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் விஜித் விஜயமுனி சொய்சா

(கொழும்பு)
பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ பிரதமராவதை 23


## ஏல விற்பனை
## யா/செங்குந்த இந்துக்கல்லூரி

யா/செங்குந்த இந்துக்கல்லூரியின் பழைய கட்டிடத்தில் இருந்து அகற்றப்பட்ட பனை மரங்கள், தீராந்திகள், ஓடுகள், கூரைத்தகடுகள், யன்னல்கள் என்பன 13.01.2020 திங்கட் கிழமை காலை 10.00 மணியளவில் யா/செங்குந்த இந்துக்கல்லூரி வளாகத்தில் ஏல விற்பனை செய்யப்படவுள்ளது. மேலதிக விபரங்களை பாடசாலை நேரத்தில் பாடசாலையில் பெற்றுக் கொள்ளமுடியும்.

வலயக்கல்விப்பணிப்பாளர் - வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம். (1773)

# மரண அறிவித்தல்கள்

பிறப்பு 24 - 11 - 1975



இறப்பு 27 - 12 - 2019

## செல்லத்துரை றெஜீந்திரன் (றெஜீ)

(முன்னாள் மினிபஸ் உரிமையாளர்)

மயிலிட்டியை பிறப்பிடமாகவும் நாகம்மாள் கோவில் வீதி மருதனார் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை றெஜீந்திரன் அவர்கள் கடந்த 27.12.2019 வெள்ளிக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் புஸ்பம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வடிவேலு மற்றும் பூமணியின் மருமகனும் ரஜனியின் அன்புக் கணவரும் காயத்திரி, சுபாஸ்கர், சுபாஸ்கர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.01.2020) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பி.ப 1.00 மணியளவில் மயிலிட்டி கொட்டுப்பள்ளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நாமகள் கோவில் வீதி,
மருதனார் மடம்

தகவல் குடும்பத்தினர்
077 912 2385 / 077 794 8406

(1775)

---

தோற்றம் 17 - 11 - 1956



மறைவு 05 - 01 - 2020

## கந்தையா யோகராஜா (செல்வம்)

(ஓய்வு பெற்ற இ.போ.ச. நிர்வாக உத்தியோகத்தர்)

கரம்பைக்குறிஞ்சி வரணியை பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கு இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா யோகராஜா 05.01.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - மாணிக்கம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற குருசாமி - மகேஸ்வரி தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற சுலோசனாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியை - யாழ்.இராமநாதன் கல்லூரி) அன்புக் கணவரும், கிருத்திகன் (தாதிய உத்தியோகத்தர் - தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை), பிரியதர்ஷன் (விவசாய போதனாசிரியர் - முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், வீணாவாகினி (வங்கி உதவியாளர் - இந்தியன் வங்கி), கல்யாணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், க.செல்லத்துரை, காலஞ்சென்ற க.ஜெயவீரசிங்கம் (சிவம்), காலஞ்சென்ற யோகேஸ்வரி (லீலா) மற்றும் சோதிமலர் (தேவி), ஜெயராணி (வசந்தி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரி, உமாதேவி, சுசீலாதேவி, செல்வநாயகம், காலஞ்சென்ற ராசலிங்கம், மற்றும் ரவீந்திரராசா, நாகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2020) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் (இணுவில்) இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


இணுவில் தெற்கு,
இணுவில்.

தகவல் : மகன்கள் - யோ.கிருத்திகன் - 077 870 8992
யோ.பிரியதர்ஷன் - 077 811 9636

(1770)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



பருத்தித்துறை யா/ ஹாட்லிக் கல்லூரி மாணவனும்,
சிவநேசன் பிறேமாதேவி தம்பதிகளின் மூத்த புத்திரனுமாகிய

## சிவநேசன் யதுர்சன்

கணிதப் பிரிவில் வடமராட்சி வலயத்தில் முதலாம் இடத்தையும் யாழ் மாவட்டத்தில் 3ம் இடத்தையும் பெற்றுள்ளார். அவருக்கு வழிகாட்டிய அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

வாழ்த்துவோர் :
சந்துருமாமா குடும்பம், சசிமாமா குடும்பம் (லண்டன்)
சிவாமாமா குடும்பம், பெரியம்மா குடும்பம் (கனடா)
சித்தி குடும்பம் (பிரான்ஸ்)

(1735)

---

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி




## அமரர் கதிர்காமு-கந்தவனம்

(முன்னாள் அதிபர் – யா/கப்புதூ ஏகாம்பர வித்தியாலயம்)

அன்போடும் பண்போடும் எம்மை
அரவணைத்து நேசித்த எங்கள்
அன்புத் தெய்வமே
ஆண்டுகள் எட்டு சென்று விட்ட போதிலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
எம் மனதில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

ஜெயமலரகம்
கப்புதூ, கரவெட்டி.

- குடும்பத்தினர்

(C-8864)

# அரசியலமைப்பில் திருத்தத்தை மேற்கொண்டு சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுக்க முயற்சி

## ஜனாதிபதியின் உரை குறித்து ஜே.வி.பி. விமர்சனம்

(கொழும்பு)

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைப் பிரகடன உரையில் நாட்டுக்கு அத்தியாவசியமான பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. ஆனால் அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவிப்பதானது சர்வாதிகாரப் போக்குக்கு வழிவகுக்கும் காரணியைப் போன்றுள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க விமர்சித்தார்.**



எட்டாவது பாராளுமன்றத்தின் நான்காவது அமர்வில் முன்வைக்கப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைப் பிரகடன உரை தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாட்டை வினவிய போதே அவர் மேற்கண்டவாறு விமர்சித்தார்.

பாராளுமன்ற சுதந்திரத்தை வரையறுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான முன்னோடியாகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைப் பிரகடன உரை அமைந்துள்ளது.

நிறைவேற்றதிகார முறையை மேலும் ஸ்திரமுடையதாக்கி சர்வாதிகார ஆட்சிக்கு செல்லவே முயற்சிக்கின்றனர். இந்த முயற்சிகளுக்கு மக்கள் விடுதலை முன்னணி ஒருபோதும் இடமளிக்காது.

அதேவேளை அரசாங்கம் நாட்டுக்கு நன்மை தரும் வகையில் ஏதேனும் நடவடிக்கைகளை முன்னெடுத்தால் அதற்கு எமது முழுமையான ஆதரவை வழங்குவோம். அதேபோன்று நாட்டுக்கு பாதகமான முடிவுகள் எடுக்கப்பட்டால் அவற்றுக்கு கடும் எதிர்ப்பினை வெளியிடுவோம்.

நாட்டுக்காக ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட கொள்கை பிரகடனத்தை ஏற்றுக் கொள்கின்றோம். எனினும் அதில் கூறப்பட்டுள்ள சில விடயங்களை ஏற்றுக் கொள்ள முடியாது. அவ்வாறான விடயங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டுவதற்கு பாராளுமன்றத்தில் எமக்கும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

எவ்வாறிருப்பினும் கட்சி மற்றும் இன,மத பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து நாட்டுக்கான சேவையை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இந்தப் பயணத்தின் போது அரசாங்கத்தின் தவறுகள் சுட்டிக்காட்டப்படும் அதேவேளை நல்ல விடயங்களை ஊக்குவிப்பதற்கும் முன்வருவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கட்சி பேதங்களின்றி ஒன்றிணைந்து நிறைவேற்றதிகாரத்தை வலுப்படுத்தும் முயற்சியைத் தோற்கடிக்க வேண்டும்

### மங்கள சமரவீர அறைகூவல்

(கொழும்பு)



ஜனாதிபதியின் எல்லையற்ற நிறைவேற்றதிகாரத்தை மீண்டும் வலுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படவிருக்கும் முயற்சிகளை கட்சி பேதங்களைக் கடந்து, ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தோற்கடிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர அறைகூவல் விடுத்தார்.

இலங்கையின் எட்டாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரை கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, "சுபீட்சத்தின் நோக்கு" என்ற கொள்கைப் பிரகடனத்தை சபையில் முன்வைத்து தனது அக்கிராசன உரையை ஆற்றினார்.

இதன்போது தற்போதைய அரசியலமைப்பில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியது அவசியமாகும் என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை நீக்குவதாக ஏற்கனவே ஜனாதிபதி கூறியிருந்த நிலையிலேயே அக்கிராசன உரையிலும் அரசியலமைப்பில் திருத்தங்களை ஏற்படுத்துவது அவசியம் என்ற கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்.

இதனையடுத்தே பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர அவருடைய டுவிட்டர் பக்கத்தில் மேற்கண்டவாறு பதிவிட்டார்.

அப்பதிவில் "ஒரு அரசியலமைப்பு சூழ்ச்சிக்கான வருடமாக 2020 அமையப்போகின்றதா? ஜனாதிபதியின் எல்லையற்ற நிறைவேற்றதிகாரத்தை மீண்டும் ஏற்படுத்தி வலுப்படுத்தும் விதமாக மேற்கொள்ளப்படவிருக்கும் முயற்சியை கட்சி பேதங்கள் அனைத்தையும் கடந்து, ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தோற்கடிக்க வேண்டும்" என்று தெரிவித்தார். (இ-7)

## இலங்கையின் புதியசாலை வரைபடம் இம்மாத இறுதியில்

(கொழும்பு)

இலங்கையின் புதுப்பிக்கப்பட்ட சாலை வரைபடம் இம்மாத இறுதியில் வெளியிடப்படும் என்றும் புதுப்பிக்கப்பட்ட சாலை வரைபடத்தின் வடிவமைப்பதற்கான பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளதாகவும் இலங்கை நில அளவைத் திணைக்களம் தெரிவித்தது.

இந்தப் புதியசாலை வரைபடத்தில் அதிவேக நெடுஞ்சாலைகள், வங்கிகள் மற்றும் அரச நிறுவனங்கள் உள்ளிட்ட ஏனைய தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் சாலை வரைபடம் இறுதியாக 2014 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பொருட்களின் பொதிகளில் 3 மொழிகளிலும் பெயர்கள்

### வர்த்தமானி வெளியானது

(கொழும்பு)

பொருட்களின் பொதிகள் அனைத்திலும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் பொறிக்கப்பட்ட வர்ணகுறி அச்சிடப்படுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியானது.


நுகர்வோர் விவகார ஆணைக்குழுவின் ஊடாக இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த வர்த்தமானி வெளியானது.

இதன்படி பொருட்களின் அதிகபட்ச சில்லறை விலை, தயாரிப்பு எண், காலாவதி திகதி, தயாரிப்பு திகதி, நிறை அல்லது அளவு, இறக்குமதி செய்யப்பட்ட நாடு அல்லது உற்பத்தி செய்யப்பட்ட நாடு என்பன பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மொத்தமாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீண்டும் பொதி செய்யப்படும் திகதி அல்லது மொத்தமாக பொதி செய்யப்பட்ட பொருட்கள் மீண்டும் தொகுக்கப்படும் திகதி குறிப்பிட வேண்டுமெனவும் நுகர்வோர் விவகார ஆணைக்குழு தெரிவித்தது. (இ-7)

## சுதந்திரக் கட்சியின் விசேட கலந்துரையாடல் நாளை

(கொழும்பு)



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இதற்காக கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அமைப்பாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் பாராளுமன்றத் தேர்தல் கட்சியின் சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்பில் கவனம்செலுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர் **புவனேஸ்வரி சதாசிவலிங்கம்**




அமரர் செல்வி **பொன்னம்பலம் சிவகங்கை**

**கடந்த 02.12.2019 அன்று சஷ்டி திதியில் சிவபதமடைந்த எமது தாயார் அமரர் புவனேஸ்வரி சதாசிவலிங்கம், கடந்த 08.12.2019 அன்று ஏகாதசி திதியில் சிவபதமடைந்த எமது பெரியதாயார் அமரர் செல்வி பொன்னம்பலம் சிவகங்கை** ஆகியோரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை 07.01.2020 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில இல்லத்தில் நடைபெறும். அன்னாரது ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்பாக வேண்டுகின்றோம்)**

**ஆதி வைரவர் வீதி, 6ஆம் வட்டாரம், மண்டைதீவு.** — **குடும்பத்தினர்** (1774)



தோற்றம் - 24.07.1930 மறைவு - 03.01.2020

# மரண அறிவித்தல்

## செல்வதுரை மயில்வாகனசுந்தரம் (MLT)

யாழ்.வல்வெட்டித்துறையை (நடராசா வீதி) பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட செல்வதுரை மயில்வாகனசுந்தரம் அவர்கள் 03.01.2020 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வதுரை - சொர்ணம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சுகிர்தாதேவி அவர்களின் அன்புக் கணவரும் ராம்மோகன், சிவசக்தி, சிவசாந்தி, ராம்ஆனந்த் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், தேவசிகாமணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் தர்மினி, முகுந்தராஜ், ராஜகுரு, கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கமலாதேவி, பாலநாதன், திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற சிவயோகம், சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு உடன்பிறவாச் சகோதரரும் ராம்தர்ஷன், ராஜ்கோகுலன், திவ்யா, சதுர்ஷன், சஞ்சிதா, உதேஷன், ப்ரீத்திகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (07.01.2020) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு Mahinda Florists and Funeral Directors Mount Lavinia, No.591, Galle Road, Mount Lavinia இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின்னர் பி.ப 4 மணிக்கு கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு - மனைவி: சுகிர்தாதேவி (ஆசை) - கொழும்பு 112729465,**
**ராம்மோகன்(மகன்)** -UK: **01923801548/07717496805**
**சிவசக்தி (மகள்)** - UK:**01189014685/07786831422**
**சிவசாந்தி (மகள்)** - Canada : **416736855**
**ராம்ஆனந்த் (மகன்)** -UK: **02086872082/07904157927**

24,6/9 Initium Road,
Dehiwala.

**தகவல்:-**
**குடும்பத்தினர்**

(C-8856)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

பழைமை வாய்ந்த
ஆதி சக்தி வாய்ந்த
மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றொங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 112 3471
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

(C-8832)

# 13 வயதுச் சிறுமி மீது மூர்க்கத்தனமாக தாக்குதல்; தந்தை உட்பட மூவருக்கு விளக்கமறியல்

(குருநாகல்)

குருநாகல் மாவட்ட நிகவரெட்டிய, கொட்ட வேஹர பகுதியில் 13 வயதுச் சிறுமியொருவரை தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் மூவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் சிறுமியின் தந்தையும், அவரது இரண்டாவது மனைவியும், மனைவியின் சகோதரியுமான அப்பகுதி கிராம உத்தியோகத்தர் ஒருவருமே கைது செய்யப்பட்டனர்.

கைதான மூவரையும் நிகவரெட்டிய நீதவான் லக்மல் திஸாநாயக்க முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது நீதவான் அவர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை பொது நிர்வாக அமைச்சர ஜனாக பண்டார தென்னக்கோனின் உத்தரவின் பேரில் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் குறித்த கிராம உத்தியோகத்தர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 13 வயது சிறுமி நிகவரெட்டிய ஆரம்ப வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மரண அறிவித்தல்

## அமரர் செபஸ்தியாம்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை



பிறப்பு 1928.11.28 — இறப்பு 2020.01.04

பலாலியைப் பிறப்பிடமாகவும் பொலிகண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்தியாம்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை அவர்கள் 04.01.2020 அன்று (சனிக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அக்னேஸ் அம்மாவின் அன்புக் கணவரும் செல்வரட்ணம், மரியரட்ணம், காலஞ்சென்ற அன்ரன் இராஜரட்ணம் மற்றும் அன்ரன் தங்கராசா, மேரிறாதா, ஞானப்பிரகாசம், அன்ரன் ஜேக்குமார், நேசமலர் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், மரியராணி, மேரிலூரசியா, மேரிலிற்வின், மேரி திரேசா புஸ்பம், யேசுதாசன், ஸ்ரலா, தங்கேஸ்வரராசா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

**அன்னாரின் இறுதிச்சடங்குகள் 06.01.2020 இன்று (திங்கட்கிழமை) காலை 10.30 மணிக்கு பொலிகண்டி குழந்தை இயேசு ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

பாலாவிக்குடியேற்றம்,
பொலிகண்டி.

தகவல்: பிள்ளைகள்
வ.அன்ரன் தங்கராசா (மகன்) 077 015 9512
வ.அனரன் ஜேக்குமார் (மகன்) 077 652 9091

(1764)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## அமரர். வல்லிபுரம் ஜெகநாதன் (ராசு)



08.12.2019 அன்று சிவபதமடைந்த எமது குடும்பதீபம் அமரர் வல்லிபுரம் ஜெகநாதன் (ராசு) அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 07.01.2020 நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவரின் மரணச் செய்தி அறிந்து எமக்கு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

இல. 695, நாவலர் வீதி.
நல்லூர், யாழ்ப்பாணம்.

(1771)

குடும்பத்தினர்.
077 905 0185

# நன்றி நவிலலும் அந்தியேட்டி ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன அழைப்பும்



அமரர் சிவபாக்கியம் கந்தையா
(குஞ்சுப்பிள்ளை அக்கா)

எமது குடும்பத்தலைவி அன்புத் தெய்வம் திருமதி சிவபாக்கியம் கந்தையா இறைபதமடைந்த 08.12.2019 முதல் இற்றை வரை உடனிருந்து ஆறுதல் கூறி தன்னலம் பாராது உதவி புரிந்த அன்புள்ளங்களுக்கும், நேரில் வந்தும், தொலைபேசி, முகப்புத்தகம் மூலமாகவும் மற்றும் பிறவழிகளிலும் தம் துயரினைப் பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் இறுதிக்கிரியைகளிலும் இறுதி ஊர்வலத்திலும் பங்கு கொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் **07.01.2020 நாளை செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில்** நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் **11.01.2020 சனிக்கிழமை மதியம் தடங்கன் புளியடி முருகமூர்த்தி** ஆலய **மண்டபத்தில்** நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் பங்குபற்றிச் சிறப்பிக்கவுள்ள அனைத்து அன்புள்ளங்களுக்கும் எம் சிரம் தாழ்த்தி கரங்கூப்பி நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

எமது தாயாரின் இறுதி நிகழ்வின் போது நான் உணர்வுகளுக்கு அடிமையாகியிருந்த தருணத்தில் எமது ஞாபகத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் நாம் யாருக்காவது தனிப்பட்ட அழைப்பைத் தரத்தவறியிருப்பின் அதனை மன்னித்து பெருமனதோடு இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

(C-8855)

மணி மகால்
மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி.

குடும்பத்தினர்.
075 242 3197

# கனவுகளும் பலன்களும்

## இரும்பு-இறந்து போனவர் கண்டால்

இரும்பு கனவில் வந்தால் என்ன பலன்.

இரும்பை பற்ற வைப்பது போல கனவு கண்டால் உங்களை விட்டுப் பிரிந்தவர்கள் உங்களைத் தேடி வருவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத நன்மையும் இலாபமும் ஏற்படும். உங்கள் மனதை மாற்ற சிலர் முயற்சிப்பார்கள். ஆனால் நன்மையுடன் முன்னேறி வரலாம்.

இரும்பை உடைப்பது போல கனவு கண்டால் பல நாட்கள் வாட்டி எடுத்த பிரச்சினை விஸ்வரூபம் எடுக்கும். ஆனால் வெற்றி உங்கள் பக்கமே ஏற்படும். சிந்திக்கும் ஆற்றலும் நிதானப் போக்கும் உண்டாகும். உடன் இருப்பவர்களால் மனநிம்மதி குறையும்.

இரும்பை வாங்குவது போல கனவு கண்டால் எதிர்பாராத சங்கடங்கள், வேலையில் சிரமங்கள் உண்டாகும். பணவிரயம், சந்தோசம் குறையும். எச்சரிக்கையாக நடந்து கொள்வதே நல்லது.

இரும்பை பிடித்துக் கொண்டு இருப்பது போல கனவு கண்டால் நீண்ட நாள் நிலுவையில் இருந்த வழக்குகள் உங்களுக்கு சாதகமாகும். உங்களுக்கு உதவ சிலர் முன்வருவார்கள். பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்பிப்பீர்கள். கைவிட்டுப் போக இருந்த பொருட்களைக் காப்பாற்றி விடுவீர்கள்.

இறந்து போனவர்களைக் கனவில் கண்டால் என்ன பலன்.

இறந்து போனவர்கள் கனவில் வந்தால் அவர்களின் ஆசியால் நன்மைகள் ஏற்படும். ஆபத்தை முன்கூட்டியே அறிவீர்கள். தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போவது போல பெரிய சங்கடங்கள் வந்தாலும் அது நன்மை தான் என்று உணர்வீர்கள்.

இறந்தவர்கள் கனவில் உங்களிடம் பேசுவது போல கனவு கண்டால் ஆபத்தான தருணத்தில் உங்களுக்கு உதவ சிலர் முன்வருவார்கள். செல்வாக்கை இழந்தவர்களாக இருந்தாலும் சிக்கிமுக்கி கல் பல வருடம் தண்ணீரில் இருந்தாலும் அதை எடுத்து இரும்பால் அடித்தால் நெருப்பு வருவது போன்று அவப்பெயரில் இருந்தவர்கள் நற்பெயர் திரும்பப் பெறுவர். உற்றார், உறவினர்களிடத்தில் புகழின் உச்சிக்கே போவீர்கள்.

இறந்தவர்கள் உங்களுடன் அல்லது உங்கள் குடும்பத்தாருடன் சாப்பிடுவது போல கனவு கண்டால் புகழும் அதன் மூலமான செல்வங்களும் ஏற்படும். விபத்தில் இருந்து தப்பிப்பீர்கள். உங்கள் கஷ்டத்தை மற்றவர்கள் தீர்த்து வைப்பார்கள். பழைய உறவு மீண்டும் புதிய உறவைப்போல மலரும். வியாபாரத்தில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும்.

# கையெழுத்துப் பிரதிப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

2020 ஆம் ஆண்டுக்கான அரச கையெழுத்துப் பிரதிப் போட்டிகளுக்கரன விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

புத்தசாசன கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சும் கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து குறித்த போட்டியினை ஏற்பாடு செய்துள்ளது. இப்போட்டிகளில் 50 பக்கங்களுக்கு குறையாத ஆய்வுக் கட்டுரைகள், தமிழ், நவீன கலைகள், அபிநயத் தொகுப்பு, வரலாறு, சிறுவர் தொகுப்பு, கலாசாரம், தொல்லியல், அழகியல், நாட்டுக்கலை மற்றும் சிறுகதை ஆகிய பிரிவுகளில் கையெழுத்துப் பிரதிகளைச் சமர்ப்பிக்க முடியும்.

மேலதிக தகவல்களைப் பெற பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# சிறுவர் பூங்கா திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கரடிவட்டி அம்பிகை சனசமூக நிலையம் மற்றும் சிறுவர் பூங்கா திறப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ச.புஸ்பராசா தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்.மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் கலந்துகொள்வார். (இ-10)

# வீதியின் குறுக்கே வைக்கப்பட்டிருந்த அறிவித்தல் பலகைகள் திருட்டு!

(யாழ்ப்பாணம்)

அகலிப்பு வேலைகளுக்காக வீதியின் குறுக்கே வைக்கப்பட்டிருந்த அறிவித்தல் பலகைகள் விசமிகளால் திருடிச் செல்லப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. புலோலி - கொடிகாமம் வீதி நீண்ட காலத்தின் பின்னர் காப்பெற் வீதியாக மாற்றுவதற்கான வேலைகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் முள்ளிப் பகுதியில் காப்பெற் இடப்பட்டுக் கொண்டிருக்கும் பகுதியில் வாகனச்சாரதிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கும் வகையில் வைக்கப்பட்டிருந்த 6 அறிவித்தல் பலகைகள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு திருடப்படுள்ளதாக நேற்று முன்தினம் சனிக்கிழமை வீதிப்புனரமைப்பு ஒப்பந்தகாரரால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. (இ-60)




சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கொடிகாமம் நகர்ப்பகுதியில் கொடிகாமம் பிரதேச இளைஞர்கள், வர்த்தகர்கள், பொது மக்கள் ஒன்றிணைந்து ஓவியங் களை வரைந்து வருகின்றனர்.(படம்:-கொடிகாமம் செய்தியாளர்)

# அன்னையின் அறக்கொடை விழாவில் ஐந்து சான்றோர்களுக்கு சிவத்தமிழ் விருது

(குப்பிழான்)

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை, கலாநிதி- தங்கம்மா அப்பாக்குட்டியின் 95 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறும்.

இதில் கல்வி, தமிழ் இலக்கியம், கலை மற்றும் பன்முகப் பணிகள் ஆற்றிவரும் ஐந்து சான்றோர்கள் "சிவத்தமிழ் விருது" வழங்கிப் பாராட்டிக் கௌரவிக்கப்படுவர்.

அந்தவகையில் கொழும்பு பல்கலைக்கழக கல்வியியற் பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர்- சோமசுந்தரம் சந்திரசேகரம்(கல்விப்பணி), மூத்த கவிஞரும், பலாலி ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபருமான கலாபூஷணம் சோ. பத்மநாதன் (தமிழ் இலக்கியம்), மூத்த எழுத்தாளரும், முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான திருமதி. கோகிலா மகேந்திரன் (பன்முகப் பணிகள்), மூத்த நாதஸ்வர வித்துவான் கலாபூஷணம் வி.கே. பஞ்சமூர்த்தி (இசைப் பணி), வெற்றிமணி சஞ்சிகையின் ஆசிரியரும், ஓவியருமான கலாநிதி மு.க.சு. சிவகுமாரன் (கலை, இலக்கியப் பணி) ஆகியோர் கௌரவிக்கப்படுவர். (இ-18)

# இராசி பலன்

**மீனம்:** பொது வழியில் பாராட்டும் புகழும் கூடும் நாள், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மேடம்:** வழிபாட்டால் சிறப்பினை காண வேண்டிய நாள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**இடபம்:** எதிலும் வேகத்தைக் குறைத்து பொறுமையாகச் செயற்படுவது நல்லது, சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், மனச்சஞ்சலங்கள் சற்றுக் கூடும்.

**மிதுனம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்:** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், எதற்காகவும் பிடிவாதம் செய்வதைத் தடுப்பது நல்லது.

| | | | |
|---|---|---|---|
| | சந் | | ராகு |
| | இராசி பலன் | | |
| சுக் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சுவாதி, விசாகம் | | |
| சூரி, சனி<br>குரு, கேது | செவ் | | |

06.01.2020

மார்கழி 21, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 6.31 மணிக்கு

ஏகாதசி பின்னிரவு 2.49 மணிவரை

பரணி பிற்பகல் 1.19 மணிவரை

சுபநேரம் 12.31-2.01 மணிவரை

இராகுகாலம் 8.01-9.31 மணிவரை

சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம்.

கார்த்திகை விரதம்.

தன்னையே கொல்லும் சினம். வளவன்

**கடகம்:** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், கண்ணியமிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், பயணத்தால் பலனுண்டு.

**மகரம்:** வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனையைக் கூறலாம், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்:** சாமர்த்தியமாகப்பேசி சாதனை படைக்கும் நாள், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும்நாள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

**தனுசு:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** சுவாரஷ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், உறவினர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர்.


**துலாம்:** நண்பர்கள் மூலம் நன்மைகள் நடைபெறலாம், பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கன்னி:** மனதில் இனம்புரியதா குழப்பங்கள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள், தொழிலில் மேலதிகாரிகளின் விமர்சனத்தை தவிர்ப்பது நல்லது.

# வைகுண்ட ஏகாதசி விரத மகிமை

இந்துக்களின் மிக முக்கிய விரதங்களில் ஒன்றாக வைகுண்ட ஏகாதசி விரதம் கருதப்படுகின்றது. வைகுண்ட ஏகாதசி விரதம் பக்தியிலும், புண்ணியத்திலும் சிறந்த ஒன்றாக விளங்குகின்றது.

அதனால் தான் "மார்கழி மாத ஏகாதசி விரதம் இருந்து என்னை வழிபடும் அனைவருக்கும் யாம் வைகு ண்ட பதவி அளித்து ஆட்கொள்வோம் என்று பகவான் மகாவிஷ்ணு அருளியிருக்கிறார். அதனால் தான் மாதங்களில் நான் மார் கழியாக இருப்பேன் என்று கூறியிருக்கிறார். வைகுண்ட ஏகாதசி விரதம் அனுஷ்டித்தால் அனைத்து தீவினைகளும் களைந்து போகும் என்பது ஐதீகம்.





சிவபெருமான் ஒரு முறை பார்வதி தேவிக்கு ஏகாதசி விரத மகிமையை பற்றி பின்வருமாறு கூறியதாக கூறப்படுகின்றது. இவ்விரதத்திற்கு பாவத்தைப் போக்கும் சக்தி உண்டு. அஸ்வமேத யாகம் செய்த பலனை ஏகாதசி விரதத்தால் பெறமுடியும்.

முப்பத்து முக் கோடி தேவர்களும் அனுஷ்டிக் கும் விரதம் இது என்று விளக்கினார். வைகுண்ட ஏகாதசியன்று விரதமிருப்பவர்கள் இறந்த பிறகு நேரே வைகுண்டம் செல்வார்கள். அவர்களுக்கு மறுபிறப்பே இல்லை என்று பக்தர்கள் மத்தியில் நம்பப்படுகின்றது.

மேலும் மாதந்தோறும் அனுஷ்டிக்கும் அனைத்து ஏகாதசி நாட்களிலும் உண்ணா நோன்பு இருந்து பெறும் பயனை வைகுண்ட ஏகாதசியன்று இருக்கும் ஒரு நாள் விரதத்தால் பெறலாம் எனக் கூறப்பட் டுள்ளது. இதனால் இது சிறப்பு வாய்ந்தாக கருதப்படுகின்றது.

**பொன்னாலை வரதராஜப் பெருமான் ஆலயத்தில் வைகுண்ட ஏகாதசி**

வரலாற்றுப் புகழ்மிக்க பொன்னாலை வரதரஜைப் பெருமாள் ஆலயம் இலங்கையின் புகழ் பெற்ற விஷ்ணு ஆலயம் ஆகும். இங்கு ஸ்ரீமத் நாராயணன் கூர்ம வடிவில் அவதரித்து பக்தர்களை காத்து அருள் புரிகின்றார். இவ்வாலயத்தில் கொண்டாடப்படும் அனைத்து உற்சவங்களும் மிகப் பிரசித்தி பெற்றவை. அந்தவகையில் மார்கழி மாதத்தில் கொண்டாடப்டும் வைகுண்ட ஏகாதசி உற்சவம் மிகச் சிறப்பு வாய்ந்தது. இதன் முக்கிய நிகழ்வான சொர்க்க வாசல் திறப்பு இன்றையதினம் நிகழவுள்ளது.

இதனை கருத்திற் கொண்டு மார்கழி மாத உற்சவம் நடந்த 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பக்தி பூர்வமாக நடைபெற்று வருகின்றது. வைகுண்ட ஏகாதசியன்று அதி காலை 3.30 மணிக்கு பெருமாளுக்கு அபிஷேக ஆராதனைகள் ஆரம்பமாகும். அதிகாலை 5 மணிக்கு சொர்க்க வாசல் திறக்கப்படும். இதன்போது திருமாலின் இருப்பிடமாக கருதப்படும் வைகுண்டத்தின் கதவுகள் திறக்கப்படுவதாக நம் பப்படுகின்றது. அன்றைய தினம் பகல் 10 மணிக்கு வசந்த மண்டபபூசை இடம்பெற்று மு.ப 11 மணியளவில் நாராயணன் தேரில் ஆரோகணிப பார்.

இந்தகைய சிறப்புகக ளைப் பெற்ற இத்தினத்தில் அடியார்கள் ஸ்ரீமத் நாரயணனை மன முருக வழிபட்டு எல்லாச் சிறப்புக்களைப் பெற்று மறுமையில் வைகுண்ட வாழ்வைப் பெறப் பிரார்த்திக்கின்றோம்.

**இ.உமணகேனன்**
விரிவுரையாளர்,யாழ்.பல்கலைக்கழகம்

# வேகக்கட்டுப்பாட்டையிழந்த கார் வீதியை விட்டு விலகி வீட்டுக்குள் நுழைந்தது



(கரணவாய்)

நெல்லியடியிலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த கார் நேற்று முன தினம் சனிக்கிழமை இரவு 10 மணியளவில் வேகக் கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகி முடக்காடு பகுதியிலுள்ள வீட்டின் தகரங்களை உடைத்துக் கொண்டு நுழைந்தது.

இச் சம்பவத்தில் தெய்வாதீனமாக எவ்வித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை. நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10-60)


# கர்நாடக சங்கீதப் போட்டியில் மாணவிகளுக்குப் பதக்கம்




(கண்டி)

கண்டி சுவர்ணமாலிகா மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற அகில இலங்கை கர்நாடக சங்கீதப் போட்டியில் வீணை இசைத்தலில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவி செல்வி உதயபவன் சகானா தங்கப்பதக்கத்தையும், புல்லாங்குழல் வாசித்தலில் ச.ஆத்மிகா வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றுக்கொண்டனர். (இ-30)

# காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தை நோக்கிப் பாத யாத்திரை







(யாழ்ப்பாணம்)

திருவெம்பாவை விரத காலத்தை முன்னிட்டு அகில இலங்கை சைவமகா சபை ஆண்டுதோறும் நடத்தும் வரலாற்றுச் சிறப்பு மிக்க காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தை நோக்கிய பாத யாத்திரை நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மாதகல் சம்பில்துறையில் அமைந்துள்ள 21 அடி உயர மான சிவபெருமான் திருச்சொரூப முன்றலில் ஆரம்பமாகியது. குறித்த பாதயாத்திரையில் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வருகை தந்த நூற்றுக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டனர். பாத யாத்திரையில் கலந்து கொண்டவர்கள் சைவசமயத்தின் அடையாளச் சின்னமாகிய நந்திக் கொடிகளைத் தமது கைகளில் தாங்கியிருந்ததுடன் சிவலிங்க ஊர்வலமும் இடம் பெற்றது. (இ-10-18)

# 2020ஆம் ஆண்டு புத்தாண்டு பலன்கள்

## 01.01.2020 - 31.12.2020



வந்துவிட்டது புத்தாண்டு. வருடத் தொடக்கமே உங்களுக்கு வசந்த காலமாகவே மாறப்போகிறது. ஏனெனில் சூரியன், புதன், வியாழன், கேது, சனி ஆகிய ஐந்து கிரகங்களின் சேர்க்கை, தன ஸ்தானத்திலேயே அமைந்திருக்கிறது. இராசிநாதன் செவ்வாய் இராசியிலேயே இருக்கிறார். எனவே யோசிக்காது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். யோகங்கள் படிப்படியாக வந்து கொண்டேயிருக்கும். யாகங்களிலும், இறைவழிபாட்டிலும் மனதைச் செலுத்தும் உங்களுக்கு இந்த ஆண்டு

### மகர குருவின் சஞ்சாரம்

8.7.2020 முதல் 9.9.2020 வரை தனுசு இராசிக்குள் குரு வக்கிரம் பெறுகிறார். இக்காலத்தில் சனியும், தனுசு இராசிக்குள்ளேயே வக்கிரம் அடைகிறார். எனவே பொருளாதாரத்தில் ஏற்ற இறக்க நிலை உருவாகும். ஒரு தொகை செலவழிந்த பின்னரே, அடுத்ததொகை வந்து சேரும். பாகப்பிரிவினையில் தடை ஏற்பட்டாலும், கடைசி நேரத்தில் அனைத்தும் சுமுகமாக முடியும். விரயங்களை சுபவிரயமாக மாற்றிக் கொள்ளுங்கள். சனி வக்கிரத்தால், எடுக்கும் முயற்சிகள் பல தடைகள் வந்தாலும், இறுதியில் கைகூடி விடும். சொத்து சுகங்கள் வாங்குவது முதல் வாகனம் வாங்கும் யோகம் வரை நல்ல பலன்களே நடைபெறும். சொல்லைச் செயலாக்கிக் காட்டுவீர்கள். துணிவும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

15.11.2020இல் மகர இராசிக்கு குரு பகவான் பெயர்ச்சியாகிச் செல்கிறார். 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை குருபகவான் மகர இராசியில் சஞ்சரிப்பார். அது குருவுக்கு நீச்ச வீடு. இருப்பினும் குருவின் பார்வை நற்பலன்களையே வழங்கும். உங்கள் இராசிக்கு 7, 9, 11 ஆகிய இடங்களில் குரு பார்வை பதிகிறது. எனவே குருப்பெயர்ச்சிக்குப் பிறகு இன்னும் முன்னேற்றம் அதிக ஒரு வகைக்கு நன்மைதான். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும். இதுவரை முடிவடையாத திருமணப் பேச்சுக்கள் இப்பொழுது முடிவாகலாம். அரசுவழி வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு அது கைகூடும். வெளிநாடுகளில் இருந்தும் உங்களுக்கு அழைப்புகள் வரலாம். படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கும். பதவி யோகமும் உண்டு. பஞ்சாயத்து தலைவர் முதல் பாராளுமன்றத் தலைவர் வரை போட்டியில் வெற்றி கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. வாழ்க்கைத் தேவைகள் ஒவ்வொன்றாகப் பூர்த்தியாகும். தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக்கவனம் செலுத்துவீர்கள். இக்காலத்தில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை, யோகபலம் பெற்ற நாளில் செய்து கொண்டால் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

### சனிப்பெயர்ச்சிக் காலம்!

உங்கள் இராசிக்கு 2ஆம் இடத்தில் சஞ்சரித்து வரும் சனி பகவானை, 'குடும்பச் சனி' அல்லது 'பாதச்சனி' என்று சொல்வார்கள். 29.4.2020 முதல் 14.9.2020 வரை தனுசு இராசிக்குள், சனி பகவான் வக்கிரம் பெறுகிறார். இந்த காலகட்டத்தில் உடன்பிறப்புகளைக் கொஞ்சம் அனுசரித்துக் கொள்வது நல்லது. சுபவிரயங்கள் அதிகரிக்கும். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. உத்தியோக மாற்றங்கள், ஊர் மாற்றங்கள் உறுதியாகலாம். வரும் மாற்றங்கள் நல்ல மாற்றங்களாகவே அமையும்.

13.2.2020 முதல் 22.3.2020 வரை தனுசு இராசியில் செவ்வாய்- சனி சேர்க்கை ஏற்படுகிறது. 3.5.2020 முதல் 17.6.2020 வரை தனுசு இராசியில் இருக்கும் சனி, கும்பத்தில் இருக்கும் செவ்வாயை பார்க்கிறது. இக்காலத்தில் விரயம் கூடுதலாக இருக்கும். சொத்துக்கள் வாங்குவது, சொந்தங்களுக்காக செலவழிப்பது போன்றவை ஏற்படும். ஆரோக்கியத்திலும் கூடுதல் கவனம் தேவை. அலைச்சலைக் குறைத்துக் கொள்வது நல்லது. அதிகார வர்க்கத்தினரை நம்பி ஈடுபடும் காரியங்கள் தாமதமாகலாம்.

26.12.2020 உத்தராடம் 2ஆம் பாதத்தில்மகர இராசியில்சனிபகவான்பெயர்ச்சியாகிச் செல்கிறார். இப்பொழுது முழுமையாக சனி உங்களுக்கு விலகி விட்டது. எனவே வருடக் கடைசியில் உங்களுக்குப் பொன்னும், பொருளும், போற்றுகின்ற செல்வாக்கும் பெருகும்.புதிய பாதை புலப்படும். நட்பு வட்டம் விரியும். உறவினர்களும், நண்பர்களும் போட்டி போட்டுக் கொண்டு உதவி செய்வர். கடன்சுமை குறையும். காரிய வெற்றிக்கு மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்பும் உண்டு. கிளைத் தொழில் செய்யும் வாய்ப்புகளும் உண்டு. அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு தலைமைப் பதவிகள் தானாகவே தேடி வரும்.

### செல்வ வளம் தரும் வழிபாடு

பிரதோஷ விரதம் இருந்து நந்தியை வழிபட்டு வருவதோடு பௌர்ணமி அன்று ஆன்மீகம் சார்ந்த மலைகளைச் சுற்றி வந்து மலைவலம் வருவதன் மூலம் மகத்துவம் பெறலாம்.

### குருவின் வக்கிர காலமும், பரிவர்த்தனை யோகமும்

27.3.2020இல் மகர இராசிக்கு குரு வக்கிர இயக்கத்தில் செல்கிறார். அங்கு 7.7.2020 வரை இருக்கிறார். இக்காலத்தில் குருவும், சனியும் வக்கிர இயக்கத்தில் இருப்பதோடு பரிவர்த்தனை யோகமும் பெறுகிறார்கள். பரிவர்த்தனை யோகம் என்பது யோகங்களில் சிறந்த யோகமாகும். உங்கள் இராசிக்கு 2,5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. தனபாக்கியாதிபதியாக விளங்குபவர். சகாய ஸ்தானத்திற்கும், சுக ஸ்தானத்திற்கும் அதிபதியானவர் சனி. இந்த இரண்டு கிரகங்களும் தங்கள் வீடுகளை மாற்றிக் கொண்டு பரிவர்த்தனை யோகம் பெறுவதால் சுகங்களும், சந்தோஷங்களும் இந்தப் புத்தாண்டில் அதிகமாகவே வரும். ஈர்ப்புசக்தி மிக்க உங்கள் பேச்சைக் கேட்டு எல்லோரும் எளிதில் காரியங்களை முடித்துக்கொடுப்பர். பிள்ளைகளின் திருமணம் சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றி தரும்.

# நம்பிக்கைகள் அனைத்தும் நடைபெறும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

ஒரு பொன்கொழிக்கும் ஆண்டாக அமையப்போகிறது.

தனாதிபதி குரு தனஸ்தானத்திலேயே இருப்பது மிகமிக யோகமாகும். அவரோடு தொழில் ஸ்தானாதிபதி சூரியனும் இணைந்திருப்பது இன்னும் அதிக யோகத்தைக் கொடுக்கும். தொழிலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் வருமானம் உயர வழிபிறக்கும். ஞானகாரகன் கேது 2இல் இருப்பதால் ஆன்மீகத் தேடல் அதிகரிக்கும். ஆலயத் திருப் பணிகள் செய்வதற்கு வாய்ப்புகள் கைகூடி வரும்.

இலாபாதிபதி புதன் சூரியனோடு இணைந்து புத - ஆதித்ய யோகம் ஏற்படுகிறது. எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். கலைத்துறையில் ஈடுபாடு கொண்டிருப்பவர்கள், அதில் பிரகாசிக்கும் நேரம் இது. கௌரவம், அந்தஸ்து உயரும். அதிகாரப் பதவியில் உள்ளவர்கள் ஆதரவு கொடுப்பர். இல்லத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். மங்கல நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாக நடைபெறும்.

### பணப்புழக்கம் தரும் குருவின் பார்வை

வருடம் தொடங்கும் பொழுது குரு உங்கள் இராசிக்கு 2ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அவரது பார்வை 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிகிறது. சாதாரண மனிதனையும் சக்கரவர்த்தியாக்கும் ஆற்றல் குருவின் பார்வைக்கு உண்டு. அந்த அடிப்படையில் ஜீவன ஸ்தானத்தை பார்க்கும் குருவால் தொழில் வளர்ச்சி மிகச் சிறப்பாக இருக்கும். குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும்.

குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்கும் வேலை கிடைத்து உதிரி வருமானம் வரும். சுயதொழில் செய்பவர்கள், தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுவர். சமுதாயத்தில் உயர்ந்த நிலை உருவாகும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். வெளிநாட்டில் இருந்தும் அழைப்புகள் வரலாம். உங்கள் பிள்ளைகளுக்கு திருமணம் முடிந்து, வெளிநாடு சென்று பணி புரியும் வாய்ப்பு அமையும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். புதிய வாகனம் வாங்கும் யோகம் சிலருக்கு உண்டு. சுப நிகழ்ச்சிகள் வரிசை கட்டி நடைபெறும் நேரம் இது.

### ராகு - கேது பெயர்ச்சிக் காலம்

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 8ஆம் இடத்தில் சஞ்சரித்து வரும் ராகு பகவான், 1.9.2020 அன்று நடைபெறும் பெயர்ச்சிக்குப் பிறகு, 7ஆம் இடத்திற்கு வரப்போகிறார். அதே போல் 2ஆம் இடத்தில் சஞ்சரித்து வரும் கேது, உங்களுடைய ஜென்ம ராசிக்கு வருகிறார். ராகு - கேதுக்கள் சுயபலமற்ற கிரகங்கள். அவர்கள் யார் வீட்டில் சஞ்சரிக்கிறார்களோ அவர்களுக்குரிய பலன்களையே வழங்குவார்கள்.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, சுக்கிரன் வீட்டில் ராகுவும், செவ்வாய் வீட்டில் கேதுவும் இருக்கிறார்கள். உங்கள் இராசிநாதனாக செவ்வாய் விளங்குவதால் யோசிக்காது செய்த காரியங்களில் கூட யோகங்கள் ஏற்படும். புகழ், செல்வாக்கு அதிகரிக்கும். தேசப்பற்றும், தெய்வப்பற்றும் தானாக வந்து சேரும். திடீர் மாற்றங்களும், தெய்வீக சிந்தனைகளும் அதிகரிக்கும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். மகான்களின் தரிசனமும், அருளாளர்களின் ஆதரவும் உண்டு. தாய்மாமன் வழி ஆதரவு சாதகமாக அமையும். வருங்கால நலன்கருதித் தீட்டிய திட்டங்கள் எல்லாம் வெற்றி பெற கேதுவின் ஆதிக்கம் உங்களுக்குக் கைகொடுக்கும்.

சப்தம ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பது




### பெண்களுக்கான பலன்கள்

இந்தப் புத்தாண்டு பொன்கொழிக்கும் ஆண்டாக அமையப்போகிறது. புதிய முயற்சிகளில் வெற்றி, பொருளாதாரத்தில் உயர்வு, எதிர்பார்ப்புகள் நிறைவேறுதல், தொழிலில் இருமடங்கு இலாபம் கிடைத்தல் போன்றவை அனைத்தும் நடைபெறும் ஆண்டாக இந்த ஆண்டு அமையப் போகிறது. கணவன்- மனைவிக்குள் அன்பும், ஆதரவும் அதிகரிக்கும். புகுந்த வீட்டிற்கும், பிறந்த வீட்டிற்கும் பெருமை சேர்க்கும் விதம் உங்கள் வாழ்க்கைப் பாதை அமையும். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். பணிபுரியும் பெண்களுக்கு வர வேண்டிய பதவி உயர்வு குறிப்பிட்டபடி வந்து சேரும். ஆடை, ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும். அதிகார பதவி கூட உங்களுக்கு வரலாம். வெளிநாடு, அல்லது பிற மாநிலங்களுக்கு பயணம் செல்லும் வாய்ப்பும் கைகூடலாம். உடன் பிறந்தவர்களின் திருமணம் சிறப்பாக நடைபெறும். குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சதுர்த்தி விரதமிருந்து ஆனைமுகப்பெருமானையும், சஷ்டி விரதமிருந்து முருகப் பெருமானையும் வழிபடுவது நல்லது.

(தொடரும்)

# தமிழ் அரசியல் கைதி உயிரிழப்பு

# நீதியான விசாரணை நடத்தக்கோரி கைதிகள் கூரைமீது ஏறிப்போராட்டம்

## மட்டு.சிறைச்சாலையில் பதற்றம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு, சிறைச்சாலையில் தமிழ் கைதியொருவர் உயிரிழந்த நிலையில், சக கைதிகள் குறித்த மரணம் தொடர்பாக உரிய விசாரணை நடத்த வேண்டும் என வலியுறுத்தி, சிறைச்சாலை கூரை மீது ஏறிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசியல் கைதியான செல்லப்பிள்ளை மகேந்திரன் என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்தார். நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் உயிரிழந்தார்.

1993 ஆம் ஆண்டு வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக இடம்பெற்ற இராணுவ சுற்றிவளைப்பில் இவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.



உயிரிழந்த குறித்த அரசியல் கைதியின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டு நேற்று முன்தினம் சடலம் உறவினர்களால் அடக்கம் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இவரது மரணம் தொடர்பாக நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியே சக கைதிகளால் நேற்றுப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கைதிகளின் போராட்டத்தைத் தொடர்ந்து சிறைச்சாலையின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதுடன் படையினரும் பாதுகாப்புக்காக அழைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த சிறைக்கைதிகளின் போராட்டம் காரணமாக மட்டக்களப்பு சிறைச்சாலைப் பகுதியில் பதற்றமான நிலைமை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



கரணவாய் வடக்கு மற்றும் வடமேற்குக் கிராம உத்தியோகத்தர்களின் வேண்டுகோளின் பிரகாரம் கிராமத்தை தூய்மையாக்கும் செயற்றிட்டத்தின் கீழ் உக்காத கழிவுகள் வீதிகளிலிருந்தும் வீடுகளிலிருந்தும் அகற்றப்பட்டன. (பாடங்கள்:-மகாலிங்கம்)


பண்ணை வெற்றிடம்

இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கியிருந்து, பசுக்களைப் பராமரித்தல் உட்பட பல்வேறு முக்கிய பணிகளிலும் பொறுப்புடன் ஈடுபடக்கூடியவர்கள் தேவை. உடனே தொடர்பு கொள்ளவும்.

திருநாவுக்கரசு நினைவு

மாதிரிப் பண்ணை, மாவிட்டபுரம்

MAVAI

076 234 8877

இப்பொழுது பெறலாம்: இனிமையான TJC மாம்பழங்கள்



(1772)


# மரண அறிவித்தல்

## அமரர்.திருமதி. சரஸ்வதி வேலாயுதம்பிள்ளை

**மலர்வு**
**1960.04.22**

**உதிர்வு**
**2020.01.04**



கிளிநொச்சி, முரசுமோட்டை, பழையகமத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி.சரஸ்வதி வேலாயுதம்பிள்ளை அவர்கள் கடந்த 04.01.2020 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் முருகர் மற்றும் காலஞ்சென்ற பார்வதிப்பிள்ளையின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான சித்தர் பார்வதிப்பிள்ளையின் மருமகளும் வேலாயுதம்பிள்ளை (வேலாயுதம்) அவர்களின் பாசமிகு மனைவியும் சஞ்சயன் (அமரர்), ரோஜிதா (U.K), சஞ்சீவன் (Belgium), சதுர்சன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் நிரஞ்சன் (U.K), சிந்துஜா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆரனி (U.K), ஆருசன் (U.K), ஆகியோரின் பேத்தியாரும் புஸ்பவதி, செல்வராசா, தனலட்சுமி, மகேந்திரராசா, ரவீந்திரராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கணபதிப்பிள்ளை, கவிதா (A.O-கமநல அபிவிருத்தி திணைக்களம், கிளிநொச்சி), பாலசுப்பிரமணியம், சுகந்தா, மேனகி (U.K), தவமணி, சிதம்பரநாதன், செல்லம்மா (ஓய்வு பெற்ற ஆசிரியர்), செல்வராசா, சிவபாக்கியம், யோகராசா (Norway) , வசந்தாநிதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் முரசுமோட்டை பழைய கமத்தில் உள்ள அவரது இல்லத்தில் 07.01.2020 நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெற்று தகனக் கிரியைகளுக்காக முரசுமோட்டை இந்து மயானத்திற்கு முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பழையகமம்,
முரசுமோட்டை,
கிளிநொச்சி.

077 679 0505

தகவல்:
குடும்பத்தினர்

1769

# தமிழ் மக்களின் சுவாசத்தை நிறுத்தும் வகையில்

# ஜனாதிபதியின் செயற்பாடுகள் தீவிரமாக இடம்பெறுகிறது

## பெரும்பான்மைத்துவ ஆட்சி எமக்கு பெரும் நெருக்கடி

### ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்கிறார் மாவை எம்.பி.



(முல்லைத்தீவு)

**ஜனாதிபதி வெளியிட்டுள்ள தனது கொள்கை அறிக்கையில் பெரும்பான்மைத்துவ ஆட்சி என்று குறிப்பிட்டிருக்கின்றார். இது இன்னுமொரு பெரும் நெருக்கடியினை எமக்குத் தந்திருக்கின்றது. இதை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவில், நேற்றுமுன் தினம் இடம்பெற்ற தமிழரசுக்கட்சியின் 70ஆம் ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

ஜனாதிபதி பாராளுமன்றத்திலே சமர்ப்பித்துள்ள கொள்கை அறிக்கையினை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. அவர் இந்த நாட்டினுடைய இனப் பிரச்சினையினை முக்கியமாகக் கருதி ஒரு கொள்கை அறிக்கையினை வெளியிடுவார் என நாம் எதிர்பார்க்கவில்லை.

அவர் புதிய சித்தாந்தங்களைச் சொல்கின்றார். இந்த நாட்டில் எழுபது ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்ற வரலாற்றினை மாற்றியமைத்து, இந்த நாட்டில் ஒரு இனப் பிரச்சினை இல்லை என்கின்றார். இந்த நாட்டில் அரசியல் அதிகாரங்களை பகிரவேண்டிய அவசியம் இல்லை என்று சொல்கின்றார்.

சர்வதேச ரீதியாக இந்தியாவுடன் செய்யப்பட்ட உடன்படிக்கைகள், ஐ.நா சபையில் கடந்த 2015 முன்வைக்கப்பட்ட முப்பது ஒன்று என்ற தீர்மானம், இன்றும் நடைமுறையில் இருக்கின்றது. அதை நிராகரிப்போம் என்று சொல்லுகின்றார்.

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு சம அந்தஸ்து உண்டு, இந்த மண்ணினை ஆட்சி செய்வதற்கு உரிமையுள்ளவர்கள் சித்தாந்தத்தினையோ, ஜனநாயக பண்பாடுகளையோ குறிப்பிடாது, பௌத்த சிங்களப் பேரினவாத, பெரும்பான்மைத்துவ ஆட்சி தான் இந்த நாட்டில் இடம்பெறும் என உறுதி பூண்டிருப்பதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

தமிழ்மொழியில் தேசியகீதம் பாடக்கூடாது என்பதற்காக நாம் சண்டையிடுவதல்ல, அப்படி தேசியகீதம் இசைத்தால் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்துவிடும் என நாம் நினைக்கவில்லை, அதுவல்ல பிரச்சினை, மொழி ஒரு அடையாளம், தமிழுக்கு சம அந்தஸ்து இல்லை என்பது தமிழர்களுக்கு சம அந்தஸ்து மறுக்கப்படு வதாகும். இந்த ஆட்சியினால் தமிழ் மக்களுக்கு ஏற்படப்போகும் ஆபத்துக்கள், ஜனநாயகத்திற்கு ஏற்படப்போகும் ஆபத்துக்கள் நிறையவே இருக்கின்றன.

எமது இனத்தை அழிக்கின்ற, நிலங்களை ஆக்கிரமிக்கின்ற, எமது மொழி உரிமைகளை முடக்குகின்ற செயற்பாடுகள் தற்போது அதிகம் முனைப்புப் பெற்று வருகின்றன. இராணுவ அதிகாரிகள் எல்லாம் தற்போது சிவில் நிர்வாகத்தில் இந்த அரசாங்கத்தால் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர். இவ்வாறு தமிழ் மக்களின் சுவாசத்தினை நிறுத்தி விடக்கூடியவகையில் ஜனாதிபதியின் செயற்பாடுகள் தீவிரமாக இடம்பெறுகின்றது.எனவே நாம் எமது இனமும், நிலமும் விடுதலை பெறும்வரையில் ஜனநாயக ரீதியாக தொடர்ந்தும் போராடுவோம் என தெரிவித்தார். (9)



தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள உழவு இயந்திரங்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளுக்கு ஒளித்தெறிப்பு ஸ்டிக்கர்களை தருமபுரம் போக்குவரத்து பொலிஸார் ஒட்டிவருகின்றனர். போக்குவரத்து பிரிவினரின் பொறுப்பதிகாரி மே.பு. நாணயக்கார தலைமையில் குறித்த செயற்றிட்டம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது. விபத்தினை தடுக்கும் நோக்குடன் குறித்த வாகனங்கள் மறிக்கப்பட்டு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன. (படங்கள்-தருமபுரம் செய்தியாளர்)


## பாவனைக்கு உதவாமல் இருக்கும் பரந்தன் நகர பொது மலசலகூடம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி பரந்தன் நகரத்தின் பொது மலசலகூடம், மற்றும் அதன் சுற்றுப்புறச் சூழல் என்பன சுகாதாரமற்ற நிலையில் இருப்பதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஏ9 வீதியில் மைய பகுதியில் இருக்கும் குறித்த மலசலகூடம் வெளிமாவட்டங்களில் இருந்து வரும் பொது மக்கள், நகரத்தின் வர்த்தகர்கள் என அனைவரும் பயன்படுத்தும் ஒரே ஒரு இடமாக இது காணப்படுகிறது.

மேற்படி மலசலகூடம் சீரற்ற நிலையில் குப்பைகள் நிறைந்ததாகவும் துர்நாற்றம் வீசுவதாகவும் சுற்றுப்புறம் சுகாதாரமற்றதாக காணப்படுவதால் பொதுமக்கள்




பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

கரைச்சி பிரதேச சபை இதனை மிக விரைவில் சீரமைத்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளது. (9-318)

## சட்டவிரோதமாக மரக்குற்றிகளை ஏற்றிவந்த வாகனம் விபத்து

### சாரதி தப்பியோட்டம்



(நெளுக்குளம்)

ஓமந்தை கள்ளிகுளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி சட்டவிரோதமான மரங்களை கடத்திச்சென்ற கப்ரக வாகனம் ஒன்று விபத்திற்குள்ளாகியதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று 4 மணியளவில் ஓமந்தை ஏ-9 வீதி கள்ளிகுளம் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த வாகனம் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட மரங்களுடன் வவுனியா நோக்கிச் சென்ற நிலையில் கள்ளிக்குளம் வளைவில் திரும்ப முற்பட்டபோது வீதியின் அருகில் இருந்த மின்சார கம்பத்துடன் மோதுண்டு விபத்திற்குள்ளாகியது.

வாகனத்தை செலுத்திய சாரதி தப்பியோடியுள்ளதாக தெரிவித்த ஓமந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (9-299)




## துணுக்காய் பிரதேசத்துக்கு திடீர் மரண விசாரணை அதிகாரிய்யை நியமிக்கக் கோரிக்கை

(அக்கராயன்)


முல்லைத்தீவு ஆதார வைத்தியசாலையில் சடலங்களை உடற்கூட்டுப் பரிசோதனை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்டபட்ட பகுதிகளில் இறப்புகள் ஏற்படும் போது திடீர் மரண விசாரணை அதிகாரி இல்லாததன் காரணமாக முல் லைத்தீவு பொது வைத்தியசாலை அல்லது கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு சடலங்கள் கொண்டு செல்லப்படுகின்றன.

இதன் காரணமாக பெரும் பணச் செலவு ஏற்படுகின்றது. சடலங்களும் பழுதடையக் கூடிய நிலையில் காணப்படுகின்றன. இது தொட்பாக துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அந்தவகையில் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சடலப் பரிசோதனைகள் செய்யக் கூடிய வகையில் அதிகாரிகள் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். திடீர் மரண விசாரணை அதிகாரி துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு நியமிக்கப்பட வேண்டும். கடந்த பத்தாண்டுகளாக சடலங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டே உடற்பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. இனிவருங்காலங்களில் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சடலப் பரிசோதனைகள் இடம் பெற வேண்டும். அண்மையில் விபத்து ஒன்றில் துணுக்காயில் உயிரிழந்தவரின் உடல் முல்லைத்தீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரு நாட்கள் கடந்த நிலையில் துணுக்காய்க்கு எடுத்து வரப்பட்ட நிலையில் சடலம் சீல் செய்யப்பட்டே எடுத்து வரப்பட்டதாகவும் உறவினர்களினால் சடலத்தினைப் பார்வையிட முடியாமல் போய் விட்டதாகவும் துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. (9-350)

# மீள்குடியேறி 10 ஆண்டுகள் கடந்தும் அடிப்படைவசதிகள் பூர்த்தி செய்யப்படவில்லை

## வவு.சிதம்பரம் கிராம மக்கள் குற்றச்சாட்டு



(நெளுக்குளம்)

வவுனியா கள்ளிக்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள சிதம்பரம் கிராமத்தில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு பத்து ஆண்டுகள் கடந்தும் அங்கு பொதுக்கட்டடம் இன்றி மக்கள் அவதியுற்று வருவதாகவும் சேதமடைந்த சனசமூக நிலையம் இன்று வரையிலும் புனரமைப்பு செய்யப்படவில்லை. இதனைச்சீரமைத்துத்தருமாறு பல்வேறு தரப்பினரிடம் கோரியும் எவ்விதமான நடவடிக்கையும் இடம்பெறவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா கள்ளிக்குளம் 'ிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள சிதம்பரம் கிராமத்திலுள்ள மக்கள் கடந்த 1983ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக அப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளவும் கடந்த 2010ஆம் ஆண்டு திரும்பி வந்து மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

எனினும் அங்கு மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான அடிப்படை வசதிகள் வீதிகள். போக்குவரத்துக்கள் மற்றும் சேதமடைந்து காணப்படும் சனசமூக நிலையம் என்பன அபிவிருத்தி செய்யப்படவில்லை.

37 வருடங்கள் பழைமை வாய்ந்த சனசமூக நிலையம் யுத்தத்தில் கைவிடப்பட்டு சேதமடைந்து காணப்படுகின்றது. அப்பகுதி மக்கள் தமக்கான கிராம நிகழ்வுகளுக்கு சேதமடைந்த சனசமூக நிலையத்தினையே தற்போதும் பயன்படுத்தி வருகின்றனர்.

இதனைத்திருத்தித் தருமாறு மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலர் உட்பட மக்கள் பிரதிநிதிகள் எனப்பல தரப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டும் எவ்விதமான நடவடிக்கைகளும் வேலைத்திட்டங்களும் இன்று வரையிலும் முன்னெடுக்கப்படவில்லை.

சிதம்பரம் கிராமத்தில் 160 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்போது மீள் குடியேற்றப்பட்டு வசித்து வருகின்றனர். அங்கு பொது நோக்கு மண்டபம் அமைக்கப்படவில்லை. சேதமடைந்து காணப்படும் சனசமூக நிலையம் புனரமைப்புச் செய்யப்படவில்லை.

தமது கிராம நிகழ்வுகளை சேதமடைந்த சனசமூக நிலையத்தில் மேற்கொண்டு வருவதாகவும் இதன் திருத்தவேலைகளை மேற்கொள்வதற்கு எவரும் முன்வந்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் தமக்கான அடிப்படை வசதிகள் உட்பட சேதமடைந்து காணப்படும் சனசமூக நிலையத்தை சீரமைத்துத்தருமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-299)

# டெங்கைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பாடசாலையில் சிரமதானம்





(நெளுக்குளம்)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் உப அதிபர் தலைமையில் ஆரம்பப்பிரிவில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட பாரிய சிரமதான வேலைத்திட்டத்தை ஒளிப்படப் புகைப்படக்கலைஞர்கள் சங்கம் சுகாதாரப் பிரிவுடன் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

பாடசாலையில் துப்பரவுப் பணிகள் மேற்கொள்வதற்கு பாட சாலை அதிபரூடாக விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக வவுனியா பொது சுகாதாரப்பரி சோதகர் க.சிவரஞ்சன் தலைமையில் வவுனியா மாவட்ட ஒளிப்பட புகைப்பட கலைஞர்கள் சங்கத் தலைவர், செயலாளர், உறுப்பினர்களின் பங்களிப்பில் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களுடன் இணைந்து பாடசாலையில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட ஒளிப்படப் புகைப்பட கலைஞர்கள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (9-250-299)




# கால்நடைகள் வீதிக்கு வருவதாலே விபத்துக்கள் அதிகரிக்கின்றன

## மாங்குளம் பொலிஸார் தெரிவிப்பு

(அக்கராயன்)


கால்நடைகள் வீதிகளுக்கு வருவதன் காரணமாகவே விபத்துகள் அதிகரித்துள்ளது என மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்தவாரம் நடைபெற்றது.


இக்கூட்டத்திலேயே பொலிஸார் மேற்கண்டவாறு தெரிவித்தனர். ஏ-9 வீதியிலுள்ள மாங்குளம் மல்லாவி வீதியிலும் கால்நடைகள் வீதிக்கு வருவதன் காரணமாக விபத்துகள் இடம்பெறுகின்றன.

கடந்த ஆண்டில் இடம்பெற்ற ஒன்பது விபத்துகளில் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர். விபத்துகளைத் தடுப்பதற்கு கால்நடை உரிமையாளர்கள் பிரதான வீதிகளில் கால்நடைகள் தங்குவதைத் தடுக்க வேண்டும்.

கால்நடைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக புதுக்குடியிருப்பு, துணுக்காய் பிரதேசசபை தவிசாளருக்கு அறிவித்துள்ளோம். விபத்துகளைத் தடுப்பதற்கு குறைந்தது ஒரு கிலோமீற்றருக்கு ஒரு இடத்திலாவது மின் குமிழ்கள் பொருத்தப்பட வேண்டும். தற்போது பொலிஸார் சுற்றாடலைப் பேணுவதில் இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். குப்பைகளை கண்ட இடங்களில் கொட்ட வேண்டாம். பொருத்தமற்ற இடங்களில் குப்பைகள் கொட்டுவோர் மீது நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மாங்குளம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (9-350)

# ஈரோஸ் அமைப்பின் இளைஞர் மாநாடு





(நெளுக்குளம்)

ஈரோஸ் அமைப்பின் இளைஞர் மாநாடு நேற்று வவுனியாவில் இடம்பெற்றது.

ஈரோஸ் அமைப்பின் தலைவர் எஸ்.துசியந்தன் தலைமையில் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இந்த மாநாடு எதிர்காலத்திற்கான இளைஞர்கள் என்ற தொனிப் பொருளில் இடம்பெற்றது.

இதன்போது எதிர்காலத்தில் இளைஞர்கள் அரசியலுக்குள் உள்வாங்கப்பட வேண்டும் எனவும் பொருளாதார மேம்பாடுகளை எவ்வாறு கிராம மட்டங்களிலிருந்து கொண்டு செல்வது போன்ற கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இந்நிகழ்வில் ஈரோஸ் அமைப்பின் தலைவர் எஸ்.துஸ் யந்தன், அமைப்பின் தேசிய அமைப்பாளர் மாணிக்கம் ஜெகன் மற்றும் அமைப்பின் உறுப்பினர்கள் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த ஈரோஸ் அமைப்பின் இளைஞர்கள், ஆதரவாளர்கள் பலர் கலந்து கொண்டனர். (9-299)

# மாங்குளத்திலிருந்து மாந்தை,துணுக்காய் பிரதேசங்களுக்கான பேருந்து சேவையை சீர்படுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாங்குளத்தில் இருந்து மாந்தை கிழக்கு பாண்டியன்குளம், துணுக்காய் ஆகிய பகுதிகளுக்கு காலை 8 மணிக்குப் பின்னரே பேருந்துகள் பயணிப்பதன் காரணமாக இப்பகுதிக்குச் செல்லும் உத்தியோகத்தர்களும் பொது மக்களும் மாங்குளம் நகரத்தில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து காலையில் வருகின்ற இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து ஒன்று காலை 7.30 மணிக்கு மாங்குளத்தினை வந்தடைந்தாலும் 8 மணிக்குப் பின்னரே பயணத்தினை தொடங்குவதாகவும் இதன் காரணமாக துணுக்காய் பிரதேச செயலகம், மாந்தை கிழக்கு பிரதேச செயலகம், பாடசாலைகள், பிற திணைக்களங்களுக்குச் செல்லும் உத்தியோகத்தர்கள் உரிய நேரத்தில் தமது பணியிடங்களைச் சென்றடைய முடியாமல் மாங்குளத்தில் காத்திருக்க வேண்டியுள்ளது.

அவசரமாகச் செல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் பெரும் தொகைப் பணத்தினைச் செலுத்தி ஆட்டோவில் செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. கடந்த பத்தாண்டுகளாக இந்த நிலைமை காணப்படுகின்றது.

இலங்கை போக்குவரத்து சபையினர் மாங்குளத்தில் பேருந்து நிலையம் ஒன்றினை உருவாக்கி இப்பகுதியில் இருந்து கிராமங்களுக்கான பேருந்து சேவைகளை முன்னெடுக்க வேண்டும். குறிப்பாக மிகவும் பின்தங்கிய பகுதிகளாகக் காணப்படுகின்ற மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளின் கிராமங்களின் போக்குவரத்திற்கு இ.போ.சபையின் பேருந்துகள் பணியில் ஈடுபட வேண்டும்.

இது தொடர்பாக பொது அமைப்பு களினால் பாராளுமன்ற உறுப்பினர்கள், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கு கடிதங்கள் மூலமும் நேர டியாகவும் முறைப்பாடுகள் செய்தும் இக்கிராமங்களுக்கு பேருந்து சேவைகள் நடைபெறவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். (9-350)



வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் தரம் ஐந்து புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலை அக்குவைனஸ் கேட்போர் கூடத்தில் ஆரம்பப் பிரி வின் பதில் அதிபர் அருட்சகோதரி யசோதா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட மேலதிக செயலாளர் த.திரேஸ்குமார், வவுனியா இறம்பைக் குளம் புனித அந்தோனியார் ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி எம்.ஜெயபாலன், வவுனியா தெற்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் சீ.மரியநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்:-நெளுக்குளம் செய்தியாளர்)

பாரதம்

# ராஜஸ்தான் வைத்தியசாலையில் இருமாதங்களில் 110 குழந்தைகள் பலி!

## விசாரணைகள் ஆரம்பம்



(ராஜஸ்தான்)

ராஜஸ்தான் மாநிலம் கோட்டாவில் உள்ள அரச வைத்தியசாலையில் இரு மாதங்களில் 110 பச்சிளம் குழந்தைகள் உயிரிழந்தன.

ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள அரச வைத்தியசாலையில் பச்சிளம் குழந்தைகள் இவ்வாறு உயிரிழந்தமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மாதம் 100 குழந்தைகளும் இம்மாதத்தில் 10 குழந்தைகளும் உயிரிழந்திருக்கின்றன. இதுதொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. (ஜ-2)

# அரச படைக...

# அல்ஷபாப் ப...

(மொகாடிஷு)

சோமாலியாவின் லோவர் ஷாபெல்லே பகுதியில் அரச படைகள் நடத்திய தாக்குதலில் அல்-ஷபாப் பயங்கரவாதிகள் 33 பேர் உயிரிழந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடத்தப்பட்ட தாக்குதல் நடவடிக்கையின்போதே பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

சோமாலியாவின் பல பகுதிகளில் அல்-கொய்தா ஆதரவு பெற்ற உள்நாட்டு பயங்கரவாத அமைப்பான அல்-ஷபாப்பின் குழுக்கள் பல பகுதிகளில் இயங்கி வருகின்றன.

சோமாலியா அரசை கவிழ்த்துவிட்டு மிகவும் கண்டிப்பு நிறைந்த இஸ்லாமிய சட்டங்களின் அடிப்படையிலான ஆட்சியை நிறுவ வேண்டும் என்பது இவர்களின் நோக்கமாக உள்ளது.

உள்நாட்டு இராணுவ வீரர்கள் மீது

# பூச்சி மருந்து கலந்த நீரை அருந்திய 50 குரங்குகள் பரிதாபமாக உயிரிழப்பு

(டில்லி)

இந்தியாவில் ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டத்தில் பயிர்களுக்கு அடிப்பதற்காக வைத்திருந்த பூச்சி மருந்து கலந்து வைத்த நீரை குடித்த 50 குரங்குகள் உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் காலை விவசாயி ஒருவர் தக்காளி பயிர்களுக்கு பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பதற்கு வாளியில் மருந்தை நீரில் கலந்து வைத்துவிட்டு இயந்திரம் மூலம் மருந்தைத் தெளித்து கொண்டிருந்தார்.

இந்நிலையில், இவருடைய விவசாய நிலம் வனப்பகுதியை ஒட்டி உள்ளதால் வனப்பகுதியில் இருக்கும் குரங்குகள் வந்து பூச்சி கொல்லி மருந்தைக் குடித்துள்ளன.

பூச்சி மருந்து கலந்த நீரை குடித்த சிறிது நேரத்தில் குரங்குகள் ஒன்றன் பின் ஒன்றாக மயங்கி கீழே விழுந்தன. இதைப் பார்த்த விவசாயி அதிர்ச்சியடைந்து உடனடியாக பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் தெரிவித்தார்.

வனப்பகுதியில் செடி, மரங்களில் குரங்குகள் அமர்ந்தவாறு இறந்து கிடந்ததை பார்த்தனர். இதில் மொத்தமாக 50 குரங்குகள் இறந்தது தெரியவந்தது.

மேலும் கால்நடை வைத்தியர்களைச் சம்பவ இடத்திற்கு வந்து வனப்பகுதியிலேயே பிரேத பரிசோதனை செய்து 50 குரங்குகளை அப்பகுதியிலேயே புதைத்தனர்.

மேலும் இதுகுறித்து பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (ஜ-2)

# இராணுவப் பாடசா...

# 28 இராணுவ வீர...



(திரிபோலி)

லிபியா தலைநகர் திரிபோலி அருகே உள்ள இராணுவப் பாடசாலைமீது நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் 28

# 120 மொழிகளில் பாடி சிறுவர் மேதை விருது வென்ற இந்தியச் சிறுமி



(டுபாய்)

120 மொழிகளில் பாடி "சிறுவர் மேதை விருதை" டுபாயில் வசிக்கும் 13 வயது இந்திய சிறுமி பெற்றுள்ளார்.

டுபாயிலுள்ள இந்தியன் மேல்நிலைப் பாடசாலையில் படிக்கும் சிறுமி சுஜிதா சதீஷ் (வயது-13). 120 மொழிகளில் பாட்டு பாடியுள்ளார். இவருக்கு '100 குளோபல் சிறுவர் மேதை விருது' கிடைத்துள்ளது. நடனம், இசை, கலை, எழுத்து, நடிப்பு, மொடலிங், அறிவியல், கண்டுபிடிப்பு மற்றும் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கும் குழந்தைகளுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. இந்த விருதை டாக்டர் அப்துல் கலாம் சர்வதேச அறக்கட்டளை, இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான் உட்பட பலர் இணைந்து வழங்குகின்றனர்.

இந்த விருது கிடைத்தது பற்றி சுஜிதா கூறுகையில், "ஒரே கச்சேரியில் பல மொழிகளில் பாடியும் டுபாயில் உள்ள இந்தியத் தூதரக கலையரங்கில் நீண்ட நேரம் நடந்த கச்சேரியில் நான் 12 வயதில் 102 மொழி பாடல்களை 6.15 மணி நேரத்துக்கு மேலாக பாடியும் இரு உலக சாதனைகளை படைத்துள்ளேன். அதற்காக நான் '100 குளோபல் குழந்தை மேதை விருதுக்கு தேர்வு செய்யப்பட்டேன்" எனத் தெரிவித்தார். (ஜ-2)

## மத்திய கிழக்கில் பதற்றம்

# பிரித்தானிய கப்பல்களை பாதுகாக்க நடவடிக்கை

(பக்தாத்)

ஈரானின் உயர்மட்ட இராணுவத் தலைவரை அமெரிக்கா கொன்றதை அடுத்து, பாரசீக வளைகுடாவில் பிரித்தானிய கொடியிடப்பட்ட கப்பல்களை அழைத்துச் செல்ல றோயல் கடற்படை போர்க்கப்பல்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஈரானிய இராணுவத் தளபதி காசிம் சுலைமானி படுகொலைக்கு ஈரான் பழிவாங்கும் என்ற அச்சத்தின் மத்தியில் கப்பல்களையும் மக்களையும் பாதுகாக்க இந்த நடவடிக்கை உதவும் என்று பாதுகாப்புச் செயலாளர் பென் வோலஸ் தெரிவித்தார்.

இதேவேளை பிரதமர் போரிஸ் ஜோன்சன் 12 நாட்கள் விடுமுறைக்குப் பின்னர் இங்கிலாந்து திரும்பவுள்ளார் என்றும் அதன்பின்னர் எதிர்வரும் நாட்களில் வெளிநாட்டுத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் பக்தாத்தில் இந்த வாரம் அமெரிக்கா நடத்திய ட்ரோன் தாக்குதலில் ஈரானிய இராணுவத்தளபதி காசிம் சுலைமானி மற்றும் ஈரானிய ஆதரவு ஈராக் போராளித் தலைவர் அபு மஹ்தி அல் முஹந்திஸ் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

இதனால் ஈரான் மற்றும் அமெரிக்காவிற்கு இடையில் பதற்றங்கள் அதிகரித்துள்ள நிலையில், இந்தக் கொலைக்கு பழிவாங்கும் நடவடிக்கையை ஈரான் மேற்கொள்ளும் என்ற அச்சம் காணப்படுகின்றது. (ஜ-2)

# குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பு; ஐதராபாத்தில் பிரமாண்ட பேரணி

(டில்லி)

குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஐதராபாத்தில் பிரமாண்ட பேரணியொன்று முன்னெடுக்கப்பட்து. குறித்த பேரணி நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. இதில் பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

இதன் போது மத்திய அரசு குடியுரிமைச் சட்டத்தை மட்டுமல்லாமல், தேசிய மக்கள் தொகை பதிவேடு, தேசிய குடியுரிமை பதிவேடு உள்ளிட்டவற்றை கைவிட வேண்டும் எனவும் வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன. மத்திய அரசு கொண்டு வந்துள்ள குடியுரிமை திருத்தவ் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு முழுவதும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் குறித்த சட்டத்திற்கு ஆதரவாகவும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# வெளிநாடு

## டைகளின் அதிரடித்தாக்குதலில் ப் பயங்கரவாதிகள் 33 பேர் பலி!



அவ்வப்போது அதிரடியாகத் தாக்குதல் நடத்திவரும் இந்தப் பயங்கரவாதிகள் மத்திய ஆபிரிக்காவில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுவரும் பன்னாட்டு அமைதிப் படையினரையும் குறிவைத்து தாக்குதல் நடத்துகின்றனர்.

மேலும், வெளிநாட்டினர் வந்து செல்லும் உணவகங்களைக் குறிவைத்தும் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையிலேயே அரசபடையினரின் தாக்குதலில் 33 பயங்கரவாதிகள் உயிரிழந்தனர்.

அண்மையில் சோமாலிய தலைநகர் மொகாடிஷுவில் தற்கொலை டிரக் குண்டு வெடிப்பில் 2 துருக்கிய பிரஜைகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட 90 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருந்தனர். இதற்கு அல்-ஷபாப் அமைப்பு பொறுப்பேற்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## டசாலைகள் மீது தாக்குதல் வீரர்கள் உயிரிழப்பு

பேர் உயிரிழந்தனர்.

குறித்த பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த 28 இராணுவ வீரர்களே உயிரிழந்தனர். மேலும் 12 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர் என அந்நாட்டு உள்துறை அமைச்சக அதிகாரிகள் தெரிவித்தனர்.

லிபியாவில் ஆட்சியில் இருந்த சர்வாதிகாரி கடாபி, 2011 ஆம் ஆண்டு கொல்லப்பட்டதில் இருந்து உள்நாட்டுப் போர் தீவிரமடைந்துள்ளது. பல்வேறு ஆயுதக் குழுக்களிடையே மோதல் ஏற்பட்டு வருகிறது.

கலிபா கப்தார் தலைமையிலான ஆயுதக் குழுவினர் நாட்டின் சில பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இந்தக் குழுவினர், சர்வதேச அங்கீகாரம் பெற்ற அரசப் படைகளுடன் போரிட்டு வருகின்றனர்.


அரசப்படை வசம் உள்ள தலைநகர் திரிபோலியை கைப்பற்றுவதற்காக கலிபா கப்தார் தலைமையிலான ஆயுதக் குழுவினர் கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து உக்கிரமான தாக்குதலை நடத்தி வருகின்றனர். இந்தப் போரில் சுமார் 400 பேர் கொல்லப்பட்டனர். கிட்டத்தட்ட 2 ஆயிரம் பேர் காயமடைந்தனர். 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஊரைவிட்டு வெளியேறியுள்ளனர்.

இவ்வாறான நிலையிலேயே இராணுவப் பாடசாலை மீது இவ்வாறு வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

### அமெரிக்கா - ஈரான் மோதல் போக்கு

## பதிலடி கொடுத்தால் இலக்குகள் தகர்க்கப்படும்

### ட்ரம்ப் மிரட்டல்



(வோஷிங்டன்)

ஈரானில் உள்ள அமெரிக்கர்கள் அல்லது அமெரிக்க சொத்துக்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தினால் சுமார் 52 இடங்களில் அமெரிக்கா தாக்குதல் தொடுக்கும் என ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மிரட்டல் விடுத்தார்.

இது குறித்து டுவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், "அமெரிக்கர்களையோ, அமெரிக்கத் தளங்களையோ ஈரான் குறிவைத்து தாக்கினால், ஈரானுக்கும் அதன் கலாசாரத்திற்கும் முக்கியமான சுமார் 52 இடங்களில் அமெரிக்கா தாக்குதல் தொடுக்கும்.

மிகத் துரிதமாக நடத்தப்படும் அந்தத் தாக்குதல்கள், மிகக் கடுமையாகவும் இருக்கும்" என பதிவிட்டுள்ளார்.


பக்தாத் விமான நிலையத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் உத்தரவின்கீழ் வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் ஈரானிய இராணுவத் தளபதி காசிம் சுலைமானி மற்றும் ஈரானிய ஆதரவு ஈராக் போராளித் தலைவர் அபு மஹ்தி அல் முஹந்திஸ் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

ஜெனரல் சுலைமானி கொல்லப்பட்டதற்குக் கடுமையான பதிலடி கொடுக்கப் போவதாக ஈரான் எச்சரித்திருந்த நிலையில் ட்ரம்ப் அவர்களுக்கு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ட்ரம்ப் டுவிட்டரில் ஈரானுக்கு விடுத்த அச்சுறுத்தல் காரணமாக தற்போது மத்திய கிழக்கில் மேலும் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. (ஜ-2)

## காட்டுத் தீயால் கதிகலங்கும் ஆஸி! மீட்புப் பணிகளுக்கு பெரும் சவால்










(கன்பெரா)

அவுஸ்திரேலியாவின் நியூ சவுத்வேல்ஸ் மாகாணத்தில் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக 100 இற்கும் அதிகமான இடங்களில் காட்டுத்தீ பற்றி எரிந்து வருகிறது.

இந்நிலையில் காட்டுத்தீயைக் கட்டுப்படுத்த தீயணைப்பு வீரர்கள் எடுத்துள்ள முயற்சிக்கு வலுவான காற்று பெரும் தடையாக காணப்படுகின்றது.

அந்தவகையில் சுமார் 120 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசுவதாகவும் இது தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சிகளுக்கு பெரும் இடையூறாக இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஜ-2)

# உயிருக்கு அச்சுறுத்தல் இலங்கைத் தூதுவர்கள் வெளிநாட்டில் தஞ்சம்!

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

நாட்டுக்குத் திரும்பிச் சென்றால் தங்களது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனக் கூறி இரு இலங்கைத் தூதுவர்கள், அவர்கள் தங்கியுள்ள நாட்டிலேயே அரசியல் புகலிடம் கோரியுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டது.

மேலும் குறித்த இருவரும் முன்னாள் அமைச்சர்கள் இருவரின் மிக நெருங்கிய நண்பர்கள் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளதாக அந்த ஊடகம் தெரிவித்தது.


கடந்த அரசாங்க காலத்தில் வெளிநாட்டுத் தூதுவர்களாக நியமிக்கப்பட்ட 14 பேருடைய பதவிக் காலத்தை புதிய அரசாங்கம் நிறைவுக்குக் கொண்டு வந்தது.

அத்துடன் பதவிக் காலத்தை முடிவுக்கு கொண்டுவந்ததன் பின்னர், இதுவரையில் நாடு திரும்பாத இலங்கைத் தூதுவர்களுக்கு நாடு திரும்ப அரசாங்கம் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கியது.


இந்நிலையிலேயே குறித்த இரு தூதுவர்கள் மாத்திரம் அரசியல் புகலிடம் கோரியுள்ளதாக கூறப்படுகின்றது. ஆனால் இவர்கள் இருவரும் எந்நாட்டுத் தூதுவர்கள் என்ற தகவல் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


## எட்டாவது பாராளுமன்றில் பதிவான

# எதிர்க்கட்சித் தலைவர் வரலாறு









(கொழும்பு)

இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் எட்டாவது நாடாளுமன்றமே எதிர்க்கட்சித் தலைவர்களாக மூன்றுபேர் பதவி வகித்த வரலாற்றைப் பதிவுசெய்துள்ளது.

எட்டாவது நாடாளுமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை சஜித் பிரேமதாஸ எதிர்க்கட்சித் தலைவராக அறிவிக்கப்பட்டதையடுத்து இந்த வரலாறு பதிவானது.

தற்போதைய நாடாளுமன்றத்தின் 2015 ஆம் ஆண்டில் ஆரம்பமான பதவிக்காலத்தில் முதல் எதிர்க்கட்சித் தலைவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பதவி வகித்தார். இதையடுத்து 2018 இல் மகிந்த ராஜபக்ஷ இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். இதையடுத்து சஜித் பிரேமதாஸ இப்பதவிக்கு தற்போது மூன்றாவது நபராக நியமிக்கப்பட்டார்.

அதேநேரத்தில், இலங்கையில் 2015ஆம் ஆண்டுக்கு முன்பு நான்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் இருந்துள்ளனர். அதன்படி, 2015 ஜனவரியில் நிமால் சிறிபால டி சில்வா குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து இரா. சம்பந்தனும் அடுத்து மகிந்த ராஜபக்ஷவும் பதவியில் இருந்ததோடு இப்போது சஜித் பிரேமதாஸ எதிர்க்கட்சி தலைவர் பதவியில் அமர்ந்துள்ளார்.

1977இல் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் போது எதிர்க்கட்சித் தலைவரின் பதவி மாற்றப்பட்டு 1988 வரை தொடர்ந்தது.

அதன்படி, எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்ட மறைந்த சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமை 1980 இல் பறிக்கப்பட்ட பின்னர் அவருக்குப் பதிலாக அனுரா பண்டாரநாயக்க நியமிக்கப்பட்டார்.

இதுவே வரலாற்றுப் பதிவாக இருந்த நிலையில் மற்றொரு வரலாறு பதிவானது.

இதற்கிடையில், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறித்தும் ஒரு பதிவு இடம்பெற்றது. அதாவது அவர் தனது நாடாளுமன்ற 43 ஆண்டுகால வரலாற்றில் முதன்முறையாக எந்தப் பதவியும் இல்லாமல் நாடாளுமன்ற உறுப்பினராக அமர்ந்திருந்தார்.

1977இல் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க அந்த ஆண்டில் இளம் அமைச்சரானார். பின்னர் பிரதமரானார். மேலும் அவ்வப்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வாக்காளர் பெயர்ப்பட்டியலை உறுதிப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியலை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

அதற்கமைய எதிர்வரும் 24 ஆம் திகதி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலுக்காக 2019 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் பயன்படுத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி நாடாளுமன்றத்தை கலைக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தால் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி முதல் மே மாதம் 6 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் தேர்தல் நடத்தப்படும் என அவர் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# செல்வம்

ஒரு பெரிய அரசன் இந்த உலகம் பூராகவும் ஆண்டு கொண்டிருந்தான். ரொம்ப காலம் அப்படி அரசாட்சி செய்து கொண்டிருந்தான். திடீரென்று அவனுக்கு சில எதிரிகள் முளைத்தார்கள். அவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இவரை தோற்கடித்தார்கள். தோற்றுப் போனதும் இவனுக்குப் பயம் வந்துவிட்டது. எங்கே எதிரிகள் நம்மை கொன்றுவிடுவார்கள் என்று! வெளியிலே வந்தால் தனக்கு ஆபத்து என்று பயந்து கொண்டு யாருக்கும் தெரியாமல் ஒரு குகைக்குள்ளே போய் பதுங்கிக் கிடக்கிறான். நிலைமையைப் பாருங்கள். முதல் நாள் அரண்மனையிலே அதிகாரம் செய்து கொண்டு இருந்தவன் மறுநாள் குகையிலே பயந்து போய் பதுங்கிக் கிடக்கிறான். இரவு நேரம் வந்தது. பசி வயிற்றைக் கிள்ளுகிறது. பிச்சை எடுத்துச் சாப்பிட வேண்டிய நிலை! பிச்சை எடுப்பதற்குப் பாத்திரம் வேண்டுமே என்ன செய்வது என்று அங்கேயும் இங்கேயும் பார்க்கிறான்.

ஒரு மூலையிலே யாரோ விட்டுட்டுப் போன ஒரு உடைந்த ஓடு கிடக்கிறது. அதை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். இருட்டில் வழி புரியவில்லை ... ஏதோ ஒரு யூகத்திலே காலை மெதுவாக எடுத்து வைத்து நடந்து போய்க் கொண்டு இருக்கிறான். வழியிலே ஒரு கறுப்பு நாய் படுத்துக் கிடந்தது. இருட்டிலே அது இவன் கண்ணுக்குச் சரியாகத் தெரியவில்லை. தவறிப் போய்க் காலை வைத்து விட்டான் அதன்மேல். நாய் சும்மா இருக்குமா? வள் என்று விழுந்து கடித்தது. காலைப் பார்க்கிறான் காலத்தையும் நினைத்துப் பார்க்கிறான். அரண்மனையிலே வீரக்கழல் அணிந்த காலை உடைய மன்னா என்று புகழ்வார்களே புலவர்கள் எல்லாம். ஆனால் அது இன்றைக்கு நாய் கடித்த காலாக ஆகிவிட்டதே என்று நினைக்கிறான்.

அது மட்டுமா? முன்பெல்லாம் பொற் கிண்ணங்களிலே தான் சாப்பிடுவான். ஆனால் இப்பொழுது? உடைந்து போன ஓட்டைக் கையிலே வைத்து நிற்கிறான். முன்பெல்லாம் நிறையப் பேர் அரண்மனைக்கு வருவார்கள். அரசருக்குக் காணிக்கை என்று சொல்லி இவன் காலடியிலே கொண்டு வந்து கொட்டுவார்கள். அப்பொழுது இவன் இந்த ஜனங்களுடைய முகத்தைதிரும்பிக் கூடப் பார்க்கமாட்டான். ரொம்ப கர்வமாக உட்கார்ந்திருப்பான். அதே ஆள் ... இன்றைக்கு எல்லோர் கண்ணிலேயும் படுகிறது மாதிரிப் பிச்சை எடுத்துக் கொண் டிருக்கிறான். அப்போதெல்லாம் காணிக்கைகளைத் தன்கையாலே வாங்குவது தனக்குக் கௌரவக் குறைச்சல் என்று நினைத்து தன்னுடைய சேவகர்களை விட்டுத்தான் அதை வாங்கிக் கொள்வான். இப்போது அவன் கையாலே பிச்சை வாங்குகிறான். நினைத்துப் பாருங்கள். அந்த மனுஷன் முதல் நாள் அரசன், மறுநாள் பிச்சைக்காரன்.... எவ்வளவு வித்தியாசம். செல்வம்தான் அப்படி ஒரு வித்தியாசம் ஏற்படுவதற்குக் காரணம். அப்படிப்பட்ட செல்வம் வாழ்க்கையை நடத்துவதற்கு நமக்குத் தேவைதான். ஆனால் அதையே நாம் அடைய வேண்டிய பயனாக நினைக்கிறோம். பாருங்கள்... அதுதான் வேடிக்கை இதை நம்மாழ்வார் அழகாக ஒரு பாசுரத்திலே சொல்கிறார்.

ஒரு நாயகமாய் ஓடவுலகுடன் ஆண்டவர்
கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர்
பெரு நாடு காண இம்மையிலே பிச்சை தான் கொள்ளுவர்
திருநாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்து உய்மினோ.
'என்றார்.


ஒரு பெரிய பணக்காரர் ஒரு துறவியிடம் சென்று... சாமி என்னிடம் நிறையப் பணம் இருக்கிறது. இருந்தாலும் நிம்மதியாக இருக்க முடியவில்லை. என்ன காரணம் என்று கேட்டார். உடனே அந்தத் துறவி இதற்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் பக்கத்திலே நின்று கொண்டிருந்த ஒரு குழந்தையைக் கூப்பிட்டார். அது ஓடிவந்தது. ஒரு அப்பிள் பழத்தை எடுத்து அது கையிலே கொடுத்தார் துறவி. அதை வாங்கிக் கொண்டு குழந்தை சிரித்தது. இன்னொரு கையிலே பழத்தைக் கொடுத்தார். அதை இன்னொரு கையிலே வாங்கிக் கொண்டு குழந்தை சிரித்தது. மூன்றாவது அப்பிளை எடுத்துக் கொடுத்தார். இரண்டு பழத்தையும் நெஞ்சிலே அணைத்துக் கொண்டு மூன்றாவது பழத்தையும் வாங்க முயற்சி செய்தது. ஆனால் அது உடனே நழுவி கீழே விழுந்து உருண்டு ஓடியது. ஏற்கனவே இருந்ததுவும் விழுந்துவிட்டது. இப்போது அந்தக் குழந்தை அழ ஆரம்பித்தது. இப்போது அந்தத் துறவி பணக்காரரிடம் சொன்னார். குழந்தையைக் கவனித்தாயா... இரண்டு அப்பிள் போதும் என்று அது நினைத்திருந்தால் இப்போது அது அழ வேண்டிய அவசியம் வந்திருக்குமா? என்றார். எதுவும் அளவுக்கு மிஞ்சினால் துன்பம் தான்! இந்தக் காலத்திலே இதையெல்லாம் யார் காதிலே வாங்குகிறார்கள். ஒருவனை நல்லவழிக்குக் கொண்டு வர வேண்டும் என்று நினைத்து அவனைக் கூப்பிட்டு உட்கார வைத்து இந்தக் கதையைச் சொன்னேன் சொல்லிவிட்டு.. அந்த குழந்தை செய்தது தப்பு தானே என்றேன்.

ஆமாம் தப்புத்தான் நானா இருந்தால் அப்படிச் செய்திருக்க மாட்டேன் என்றார். இரண்டு பழத்தோடபோதும் என்று சொல்லியிருப்பியா என்றேன். அப்படியில்லை அவர் கொடுக்கக் கொடுக்க ஒவ்வொரு பழ்மாக வாங்கிப் பின்னாடி வைத்துக் கொண்டு மறுபடியும் கையை நீட்டுவேன் என்றான். இவனை எல்லாம் எந்தக் காலத்திலே திருந்துவது.

# மணல் கடத்தல்காரர்களைத் துரத்திய மக்கள்

## ஏ-9 வீதியில் மணலைப் பறித்துவிட்டு தப்பியோட்டம்-போக்குவரத்துக்கு இடையூறு





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், அரியாலைப் பகுதியில் சட்டத்துக்குப் புறம்பாக மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களை மக்கள் துரத்திச் சென்றதால் மணலை வீதியில் பறித்துவிட்டு கடத்தல்காரர்கள் தப்பிச் சென்றனர்.

அரியாலை நெடுங்குளம் சந்திப் பகுதியில் சுமார் 300 மீற்றர் வரையான வீதியில் மணல் பரவி கிடப்பதை அவதானிக்ககூடியதாகவுள்ளது. அதனால் யாழ்ப்பாணம் - கண்டி ஏ-9 வீதியூடான போக்குவரத்துக்கு 10 மணித்தியாலத்துக்கு மேல் இடையூறு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்றதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

மணல் ஏற்றி வந்த கனரக வாகனம், இலங்கைத் தொலைத் தொடர்பு நிலையத்தின் வயர்கள் மற்றும் கம்பத்தையும் சேதப்படுத்தியது. மணல் ஏற்றி வந்த வாகனம் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)



# பகிடிவதையில் ஈடுபட்டால் எட்டு வருடங்களுக்கு பரீட்சை எழுதத்தடை!

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் பகிடிவதை நடவடிக்கையில் ஈடுபடும் மாணவர்களுக்கு எட்டு வருடங்கள் பரீட்சை எழுதத் தடை விதிக்கும்சட்டம்அமுல்படுத்தப்படவுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பல்வேறு மாற்றங்களை மேற்கொண்டு வருகின்றார். அதற்கமைய பாடசாலை அனுமதியின் போது நேரடியாகவோ மறைமுகமாகவோ இலஞ்சம் கோரப்பட்டால் 48 மணித்தியாலத்திற்குள் பணி நீக்கம் செய்யப் படுவர்.

அதேவேளை பகிடிவதையில் ஈடுபடும் மாணவர்களுக்கு 8 வருடங்களுக்கு பரீட்சை எழுதத் தடை விதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

# பேருந்து மீது தாக்குதல்



(வாகனேரி)

இலங்கை போக்குவரத்து சபையின் மட்டக்களப்பு சாலைக்குச் சொந்தமான பேருந்து மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியில் வாகனேரி என்னும் இடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பயணித்தபோதே இனந்தெரியாத நபர்கள் சிலர் சாரதியின் முன்பக்க கண்ணாடிக்கு கல்லெறிந்து தாக்குதலை மேற்கொண்டனர். (இ-7)

# ஜனாதிபதியின் வாக்குறுதியின் படி நுவரெலியாவில் பல்கலைக்கழகம்

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



(ஹற்றன்)

நுவரெலியா சததென்ன பூங்கா பல்கலைக்கழகமாக மாற்றப்படவுள்ளது.

தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம், உயர்கல்வி, புத்தாக்க அமைச்சர் பந்துல குணவர்த்தன, நேற்று முன்தினம் நுவரெலியா சததென்ன வனவியல் பூங்காவிற்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது குறித்த பூங்காவை பல்கலைக்கழகமாக மாற்றியமைக்கயிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்திலுள்ள பிள்ளைகளின் கல்வித் தரத்தை உயர்த்துவதாகவும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்பினை பெற்றுத் தருவதாகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேர்தல் காலத்தில் வாக்குறுதியளித்தார்.

அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் இங்கு பல்கலைக்கழகம் அமைக்கப்படவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறினார்.

பூங்காவை பல்கலைக்கழகமாக மாற்றுவ்தற்கான நடவடிக்கைகள் தொடர்பிலும் அமைச்சர் அதிகாரிகளுடன் இந்த விஜயத்தின் போது கலந்துரையாடினார். (இ-7)

## பொலிஸ் திணைக்களத்தில்

# எட்டுப்பெண்களுக்கு அத்தியட்சகர் பதவி

(கொழும்பு)

இலங்கையின் பொலிஸ் திணைக்களத்தில் முதன் முறையாக எட்டுப் பெண்களுக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவி வழங்கப்பட்டது. இதுவரை காலமும் இந்தப் பதவிக்கான வெற்றிடம் ஒரு பெண் அதிகாரிக்கு மட்டுமே இருந்தது.

இதேவேளை, எதிர்வரும் காலங்களில், பொலிஸ் ஆணையகத்தின் அனுமதியுடன் ஒரு பெண் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரும் இரண்டு பொலிஸ்மா அதிபர்களும் நியமிக்கப் படுவதற்கான அனுமதி கோரப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 300 | 160 | 200 | 150 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 240 | 200 | 300 |
| தக்காளி | 200 | 150 | 200 | 140 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 90 | 80 |
| கோவா | 170 | 140 | 140 | 120 | 160 |
| கரட் | 300 | 430 | 350 | 180 | 450 |
| பூசணி | 80 | 60 | 60 | 80 | 80 |
| புடோல் | 160 | 180 | 140 | 110 | 160 |
| வாழைக்காய் | 80 | 90 | 50 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 400 | 280 | 450 |
| பெரிய வெங்காயம் | 160 | 110 | 120 | 130 | 120 |
| பாகற்காய் | 200 | 300 | 350 | 200 | 300 |
| வெண்டிக்காய் | 140 | 180 | 100 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 100 | 70 | 120 |
| பயற்றங்காய் | 240 | 220 | 200 | 200 | 240 |
| லீக்ஸ் | 300 | 400 | 350 | 180 | 450 |
| பீற்றூட் | 300 | 200 | 240 | 200 | 300 |
| கறிமிளகாய் | 300 | 380 | 240 | 130 | 320 |
| முருங்கைக்காய் | — | 1600 | 800 | 500 | 800 |
| போஞ்சி | 260 | 250 | 240 | 210 | 280 |
| கத்தரிதம்புள்ள | 150 | 200 | 240 | 180 | 120 |
| கீரை - 1 பிடி | 60 | 60 | 60 | 60 | 60 |
| தேசிக்காய் | 50 | 50 | 80 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 40 | 55 | 40-60 |
| இராசவள்ளி | 160 | 200 | 200 | 210 | 220 |
| வெங்காயப்பூ | 250 | 250 | — | 250 | — |
| முள்ளங்கி | 80 | 120 | 160 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 50 | 30 | 50 |
| வல்லாரை | 15 | 70 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | 80 | 130 | 80 | 120 | 100 |

## இராஜதந்திர, வர்த்தக கொடுக்கல்-வாங்கல்களின் போது

# சர்வதேச நாடுகளிடம் மண்டியிட மாட்டோம்

## ஜனாதிபதி அழுத்தம் திருத்தம்

(நேற்றைய தொடர்ச்சி...)

அரசாங்கப் பல்கலைக்கழகங்களிலும், அரசாங்கத்தின் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களிலும் உள்ள இயலளவுகளை வினைத்திறமையாக பயன்படுத்துவதன் வாயிலாக பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

இன்று பல்கலைக்கழகங்களில் கற்பிக்கின்ற சில பாடநெறிகள் தொழிற்சந்தைக்கு ஏற்றவாறாக அமைவதில்லை. தற்கால தொழிற்சந்தை தேவைகளுக்காக எமது பல்கலைக்கழக மாணவர்களை பயிற்றுவிப்பதற்கு தற்போது கற்கும் பாடநெறிகளுக்கு மேலதிகமாக அவர்கள் தன்னிச்சையாக பங்குபற்றக்கூடிய குறுகிய கால மேலதிக பாடநெறிகளை அறிமுகப்படுத்துவதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

மாணவர்களை அனுமதிக்கும் போதும் அதேபோன்று சந்தை தேவைகளை இலக்கிட்டு பாடநெறிகளைத் திருத்தும் போதும் பல்கலைக்கழகங்களுக்கும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களுக்கும் கூடிய சுதந்திரத்தை வழங்க வேண்டும்.

நாட்டில் தற்போது உள்ள டிப்ளோமா மட்ட பாடநெறிகளை நடத்தும் நிறுவனங்களை முறையே பட்டமளிக்கும் தரத்திற்கு உயர்த்துவது அவசியமாகும்.

இதற்கான ஆரம்பமாக எமது ஆசிரியர் பயிற்சி பாடசாலைகள் மற்றும் தாதியர் பயிற்சி பாடசாலைகள் என்பவற்றை பட்டமளிப்பு தரத்திற்கு கொண்டு வருவதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம். பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் பற்றாக்குறையானது தற்போது கல்வித்துறையினுள் பிரச்சினையாகவுள்ளது. அதேபோன்று தாதியர்களுக்காக தற்போது வழங்கப்படும் மூன்று வருடகால டிப்ளோமாவை நான்கு வருடகால பட்டப்படிப்பு வரை உயர்த்துவதன் மூலமும், அவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்வதன் மூலமும் அவர்களுக்கு சர்வதேச தர அளவுகளின் கீழ் வெளிநாடுகளிலும் கூட சேவையாற்றுவதற்கும் இடமளிக்கப்பட்டுள்ளது.

உயர்தரத்தில் சித்தி பெறாதவர்களும், சாதாரண தரம் வரை கற்றுக் கொண்டவர்களுமான மாணவர்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் இயந்திரவியல் பிரிவின் அறிவினை விருத்தி செய்து கொள்வதற்காக இயந்திரவியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரித் தொகுதியை வலுப்படுத்த வேண்டும். குறித்த நிறுவனங்களுக்காக வழங்கப்படும் ஒதுக்கீடுகளையும் வசதிகளையும் அதிகரிக்க வேண்டும். இதனூடாக சர்வதேச ரீதியில் தொழில்பயிற்சி பெற்ற ஊழியப்படையை உருவாக்க முடியுமானதுடன், உள்நாடுபோன்று வெளிநாட்டுச் தொழிற்சந்தையிலும் உயர்ந்த சம்பளத்தைப் பெறக்கூடிய தொழில் வாய்ப்புக்களை எமது இளைஞர்-யுவதிகளுக்கு பெற்றுக் கொடுக்க முடிகிறது.

## ஆங்கில அறிவு போதாது

தொழிற்றுறையினுள் ஆங்கில அறிவு போதாமை பெருமளவிலான இளைஞர்-யுவதிகளுக்கான வாய்ப்புக்களை இழக்கச் செய்கிறது. இதனால் இலங்கையின் ஒவ்வொரு பாடசாலை




யிலும் ஆங்கிலமொழியைக் கற்பிப்பதற்கான வசதிகளை முன்னேற்றுவதற்கும் அதற்குத் தேவையான ஆசிரியர்களை இணைப்புச் செய்வதற்கும் விசேட திறமுறையொன்றை நாங்கள் அறிமுகப்படுத்துவோம்.

இளைஞர்-யுவதிகளுக்கு புதிய தொழில் வாய்ப்புக்களை தேடிக் கொடுப்பதற்காக எமது வெளிநாட்டு தூதரகங்களுக்கு முக்கிய பொறுப்புக்களை கையளிப்பதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம். பயிற்றப்படாத ஊழியர்கள் அநேகமானோரை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்குப் பதிலாக ஒவ்வொரு துறையிலும் பயிற்சி பெற்ற ஊழியர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதால் எமது நாட்டிற்கு கிடைக்கின்ற அந்நியச் செலாவணியை அதிகரித்துக் கொள்வதற்கும் சர்வதேச தொழிற்சந்தையினுள் எமது நாட்டின் பிரதிமையை மேம்படுத்திக் கொள்வதற்கும் முடிகிறது.

கல்வித்துறையானது ஒரு நாட்டிற்கு சிறந்த அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொள்வதற்குரிய வழியாகும். இலங்கைப் பிள்ளைகள் அதிக எண்ணிக்கையானோர் இன்று ஆசிய உயர் கல்வி நிறுவனங்களில் கற்றுக் கொண்டு இருக்கின்றனர். கல்விக்காக எமது பிள்ளைகளை அதிகூடிய பணச் செலவில் வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்குப் பதிலாக வெளிநாட்டு மாணவர்களையும் இலங்கையின்பால் கவரச் செய்யும் விதத்திலான வேலைத்திட்டத்தை நாங்கள் தயாரிக்க வேண்டும். அனைத்துப் பல்கலைக்கழகங்களும் சர்வதேச ரீதியில் தமது தரப்படுத்துகைகளிலிருந்து மேலுயர்வதற்காக குறுகிய கால அத்துடன் நீண்டகால திட்டங்களைத் தயாரிக்க வேண்டும்.

சுதந்திரம் பெற்று 70 ஆண்டுகளுக்குப் பின்னரும் கூட எமது நாடு முன்னேற்றமடைந்து வரும் நாடாகத்தான் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நாம் உண்மையிலேயே இதிலிருந்து மீண்டு முன்னேறிய நாடாக வேண்டுமாயின் அதற்காக உள்ள வாய்ப்புக்களை கண்டறிதல் வேண்டும்.

5 பில்லியனுக்கும் கூடிய மக்கள் வாழ்கின்ற ஆசியாவினுள் இன்று மாபெரும் பொருளாதார மலர்ச்சி ஏற்பட்டு உலகப் பொருளாதாரத்தின் அதிகார மையம் ஆசியாவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

பணம் செலவழிக்கும் ஆற்றலுள்ள மத்திய வகுப்பின் சமுதாயம் கடுகதியாக விருத்தியடைவது இவ்வலயத்திற்குள்ளேயாகும்.

## அரசியலமைப்பில் மாற்றம் அவசியம்

ஆகையால் எமது உள்நாட்டு தொழில் முயற்சியாளர்கள் ஆசிய பிராந்தியத்தினுள் புதிய சந்தைகளைத் தேடிச் செல்வதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

21 ஆவது நூற்றாண்டானது அறிவை மையமாகக் கொண்ட நூற்றாண்டாக அழைக்கப்படுகிறது. செயற்கை புத்திக்கூர்மை (Artificial Intelligence). உயிரினத் தொழில்நுட்பம் (Biotechnology), ரொபோ விஞ்ஞானம் (Robotics). 3D அச்சீடு, IOT உதிரிப்பாகங்கள் (Internet of Things) போன்ற அதிநவீன தொழில்நுட்பங்கள் உலகத்தை மாற்றியமைத்துக் கொண்டிருக்கின்றன.

உலகின் முன்னேற்றமடைகின்ற பல நாடுகள் இவ் யதார்த்தத்தைப் புரிந்துள்ளன. தொழில்நுட்ப மைய முதலீடுகளுக்காக அவர்கள் பெரும் பணத்தைச் செலவு செய்கின்றனர்.

எமது முதலீட்டுக் கொள்கையை முகாமை செய்யும் போது நாங்கள் இதன்பால் கூடிய கவனம் செலுத்த வேண்டும். நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்காக எமக்கு எந்த வகையான முதலீடுகள் தேவைப்படுகின்றது என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கமைய நாட்டிற்கு புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துகின்ற முதலீட்டாளர்களுக்கு விசேட வசதிகளையும், சலுகைகளையும் வழங்கி நாங்கள் அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

எமது இளம் சந்ததியை புதிய தொழில்நுட்பங்களைக் கற்பதற்கும் அவற்றிற்குரிய ஆராய்ச்சிகளை நடத்துவதற்கும் ஈடுபடுத்துவது மிக முக்கியமாகும். அதற்காக தாமதிக்காமல் துரிதமாக தயாராவதற்கு நாங்கள் கல்வித்துறைக்கு ஆதரவு அளிக்க வேண்டும். அதேபோன்று இளம் சந்ததியினருள் ஆங்கிலக்கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்ப பயன்பாட்டை மேம்படுத்துவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமக்கான சந்தை வாய்ப்புக்கள் இருப்பது தொழில் நுட்பத்துறைகளில் மட்டுமல்ல என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். வருங்காலத்தில் எம்மால் இலகுவாக முன்னேற்றக் கூடிய மற்றுமொரு துறையாவது சுற்றுலாத்துறை கைத்தொழிலாகும். 2018 ஆம் ஆண்டில் 4.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவிலான வருமானத்தை ஈட்டிய சுற்றுலாத்துறைக் கைத்தொழிலானது இன்னும் பல ஆண்டுகளினுள் 10 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்டும் தொழிலாக மாறுவதற்கு அவகாசம் உள்ளது. இதற்காக மிக முறையானதொரு வேலைத் திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளோம்.

ஜனநாயகத்தின் உச்சக்கட்ட பயனை அடைவதாயின் அரச நிர்வாகத்தையும் உரியவாறு செயற்படுத்த வேண்டும்.

அரச நிறுவனங்களை இலாபகரமாக அத்துடன் வினைத்திறமையாக நிர்வகிப்பதற்காக உயர் பதவிகளுக்கு தகுதிவாய்ந்தவர்களைத் தெரிவு செய்யும் போது உரிய துறையின் அறிவும் பொறுப்பை வகிப்பதற்கான தகைமையும் கொண்டுள்ளவர்களை நியமிப்பதாக நாங்கள் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டோம்.

அதற்கமைய புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின் அரச நிறுவனங்களை நிர்வகிப்பதற்காக பொருத்தமானவர்களைப் பரிந்துரைப்பதற்கு நாங்கள் குழுவொன்றைத் தாபித்துள்ளோம்.

2004-2014 இடைப்பட்ட காலத்தினுள் நாங்கள் இலங்கைப் பொருளாதாரத்தில் துரிதமான அபிவிருத்தி ஏற்படும் விதத்தைக் கண்டோம். வீதித் தொகுதி, வீடமைப்பு, மின்சாரம், நீர், தொடர்பாடல் வசதிகளைப் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளிலும் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம், நகர அலங்கரிப்பு போன்ற துறைகளிலும் மாபெரும் முன்னேற்றம் நிகழ்ந்தது. திறமையான நிர்வாகத்தினை தாபித்தலின் மூலம் எம்மால் மீண்டும் இந்த நிலையை உருவாக்கிக் கொள்ள முடியும்.

**சபாநாயகர் அவர்களே,**

ஜனநாயக ரீதியிலான இரர்ச்சியமொன்றில் வெற்றிகர நிலைமை தங்கியிருக்கும் அடிப்படையாவது அரசியலமைப்புச் சட்டமாகும். 1978 தொடக்கம் 19 தடவைகள் திருத்தப்பட்ட எமது அரசியலமைப்பில் உள்ள உறுதியற்ற மற்றும் குழப்பமான தன்மையினால் தற்காலத்தில் பல பிரச்சினைகள் உருவெடுத்துள்ளன.

எமது நாட்டின் பாதுகாப்பு, இறையாண்மை, நிலைப்பாடு மற்றும் ஒற்றையாட்சியை பாதுகாப்பதாகவிருப்பின் தற்போது இருக்கின்ற அரசியலமைப்பின் சில மாற்றங்களைச் செய்யவே வேண்டும்.

விகிதாசார வாக்கெடுப்பு முறையில் உள்ள ஆக்க முறையிலான இலட்சணங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் அதேவேளையில் பாராளுமன்றத்தின் நிலைப்பாட்டினையும் மக்களின் நேரடி பிரதிநிதித்துவத்தையும் உறுதிப்படுத்துவதற்காக தற்கால தேர்தல் முறையில் மாற்றங்கள் தேவைப்படுகின்றன.

இலக்கங்களினால் தேர்தல்களை வெல்லக்கூடியதாக விருப்பினும் தெளிவான தீர்மானங்களை எடுக்க முடியாத அடிப்படைவாதத்தின் அழுத்தங்களுக்கு தொடர்ந்து கீழ்படியும் நிலையற்றதொரு பாராளுமன்றம் ஒரு நாட்டிற்கு பொருந்தாது.

மக்களின் இறையாண்மையை உறுதி செய்கின்ற வலுவான சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை மற்றும் சுயாதீன நீதிமன்றம் தாபித்தலை சட்டரீதியான மாற்றத்தின் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

எமது நாட்டின் விசேட அமைவினால் உலகரீதியான புவி அரசியலினுள் முக்கிய கவனம் தற்போது இலங்கையின்பால் செலுத்தப்பட்டுள்ளது. நாங்கள் நடுநிலை வெளிநாட்டுக்கொள்கையொன்றைப் பின்பற்றுவோம். நாங்கள் அனைத்து நாடுகளோடும் நட்புறவுகளைப் பேணுவதற்கு முயற்சிக்க வேண்டும். ஆயினும் ஒருபோதும் நாம் எமது சுயாதீனத் தன்மையைக் விட்டுக் கொடுக்க முடியாது.

இராஜதந்திர உறவுகளின் போது அல்லது சர்வதேச வர்த்தக கொடுக்கல்-வாங்கல்களின் போதும் எந்தவொரு வெளிநாட்டின் முன்னிலையிலும் மண்டியிடாத நாட்டின் இறைமையை எப்போதும் பாதுகாக்கின்ற, எந்தவொரு நாடோடும் சமநிலையில் கொடுக்கல்-வாங்கல் செய்யும் தேசிய அபிமானத்தைப் பாதுகாக்கின்ற கௌரவமான ஆட்சியை நாம் உருவாக்குவோம்.

முக்கியமாக பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த எமது நிலப் பிரதேசங்கள் அல்லது பௌதீக வளங்களை ஒருபோதும் வேறொரு நாட்டிற்கு உடைமையாக்காதிருத்தல் எமது கொள்கையாகும்.

இலங்கையரை சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படும் கௌரவமான இனமாக்குவது எனது அபிலாஷையாகும்.


அந்த நோக்கத்தை நோக்கிச் செல்லும் பயணத்தின் போது ஒரு இனம் என்ற ரீதியில் ஒன்று சேர்ந்து செயற்படுவதன் மூலம் எமது முன்னிலையில் உள்ள சவால்களை வெற்றி பெறவும் முடியும்.


நான் எனது நாட்டை நேசிக்கின்றேன். நான் எனது நாட்டைப்பற்றி பெருமைப்படுகின்றேன். எனக்கு எனது நாடு தொடர்பான தொலைநோக்குள்ளது.

வரலாற்றினால் தற்கால சந்ததிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வரலாற்றுப் பொறுப்பைக் கையேற்பதற்கு என்னுடன் ஒன்று சேருமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

(முற்றும்)

# ஜனாதிபதி மாளிகையில் புண்ணிய நிகழ்வு

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும், படைவீரர்களுக்கும் நாட்டுக்கும் மக்களுக்கும் ஆசி வேண்டி முழு இரவு பிரித் பாராயணம் மற்றும் சமய உரை நிகழ்வு நேற்று கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

நாரஹேன்பிட்டி அபயராம விகாரையின் நாயக்க தேரரும் மேல் மாகாண தலைமை சங்க நாயக்கருமான சங்கைக்குரிய முருத்தெட்டுவே ஆனந்த நாயக்க தேரரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர் சங்கைக்குரிய மெதகொட அபய திஸ்ஸ தேரர், கொள்ளுப்பிட்டி வாலுகாராமவின் நாயக்க தேரர் சங்கைக்குரிய மகரகம நந்த தேரர், கைகாவல சுனந்தா ராமவின் நாயக்கதேரர், சங்கைக்குரிய போபிடியே விஜித தேரர், ரோஹன சங்க சபையின் தென்னிலங்கை உப தலைமை சங்க நாயக்க தேரர் சங்கைக்குரிய நாரன்தெனியே தம்மாவாச தேரர், கங்காராம விகாரையின் கலாநிதி சங்கைக்குரிய கிரிந்தே அஸ்ஸஜி தேரர் ஆகியோர் உள்ளிட்ட மகாசங்கத்தினர் பங்குபற்றினர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிகாரிகள் உள்ளிட்டோரும் இந்த நிகழ்வில் பங்குபற்றினர். (ஐ)

# ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்தில் நாம் அடைந்த வெற்றிகளை குறைமதிப்பிற்குட்படுத்த முயற்சி

## விஜயதாஸ மீது மனோ கார்ட்டம்



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷவால் முன்மொழியப்பட்ட 21 மற்றும் 22 ஆவது அரசியலமைப்பு திருத்தங்கள் கடந்த சில ஆண்டுகளில் நாட்டில் ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்தில் அடைந்த வெற்றிகளைக் குறை மதிப் பிற்கு உட்படுத்தும் முயற்சி யாகும் என மனோ கணேசன் குற்றம் சாட்டினார்.

மேலும், சிறுபான் மையினர் அல்லாத பிரதான அரசியல் கட்சிகளின் நாடாளு மன்ற பிரதிநிதித்துவத்தை அகற்ற முற்படும் இந்த முன் மொழியப்பட்ட அரசியலமைப்பு திருத்தங்களை பொதுமக்கள் முன் வந்து தோற்கடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த திருத்தங்கள் மூலம் விஜயதாஸ ராஜபக்ஷ ஜனநாயகம், சுதந்திரம் மற்றும் அடிப்படையில் சமீப காலங்களில் பொதுமக்கள் அடைந்த வெற்றிகளை சேதப்படுத்த முயற்சிக்கிறார்.

எனவே கட்சி வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் அனைத்துப் பிரிவினரும் ஒன்றிணைந்து நம் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்றும் இதுபோன்ற திட்டங் களை நிராகரித்து நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (இ-7)

# தெய்வீகக் கலையரங்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலா மன்றம் நடத்தும் தெய்வீகக் கலையரங்கு இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் கிழ வன்காடு கலாமன்ற மனோன் மணிக் கலையரங்கில் இடம் பெறும். (ஜ-2)


# வாசிப்பு மாத பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் ஏழாலைப் பொது நூலகத்தால் நடத்தப்பட்ட வாசிப்பு மாதப் போட்டிகளின் பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை ஏழாலை கண்ணகை மணிமண்டபத்தில் வலி. தெற்குப் பிரதேச சபைத் தவிசாளர் க.தர்ஷன் தலைமையில் இடம் பெறும். (இ-10)

# வன்முறைக் கும்பல் அட்டகாசம்!



(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் - அச்சுவேலி பத்தமேனிப் பகுதியிலுள்ள வீடொன்றின் மீது இனந் தெரியாத நபர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் மூவர் மாத்திரம் வசித்து வந்த நிலையில், நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு ஒன்பது மணியளவில் திடீரென உட்புகுந்த கும்பல் வீட்டின் கண்ணாடிகள், ஆட்டோ, மோட்டார் சைக்கிள் என்பவற்றை உடைத்து சேதப் படுத்தி விட்டு தப்பிச் சென்றது.

தாக்குதல் நடத்தியவர்கள் கன்டர் ரக வாகனத்தில் வந்ததாக பாதிக்கப்பட்ட வீட்டார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# தற்கொலைகளைத் தடுக்க விழிப்புணர்வு நடவடிக்கை

## நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் முன்மாதிரி



(குப்பிழான்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித் தலைவியும், நல்லூர் பிரதேச சபை உறுப்பினருமான திருமதி- வாசுகி சுதாகரன் அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டில் அதிகரித்துவரும் தற்கொலைகள் தொடர்பாகவும், நல்லூர் பிரதேச சபையின் தற்காலிக உக்காத குப்பைகளின் சேமிப்பு மையம் தொடர்பாகவும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஆரம்பித்தார்.


நேற்று முன்தினம் சனிக்கிழமை திருநெல்வேலி ஒன்பதாம் வட்டாரத்தில் ஆரம்பமான குறித்த விழிப்புணர்வுச் செயற்பாடுகள் நேற்று இரண்டாவது நாளாக காலை முதல் மாலை வரை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது உறுப்பினர் வாசுகி சுதாகரன் உள்ளிட்ட குழுவினர் வீடு வீடாகச் சென்று தற்கொலை தொடர்பாக மக்களுக்கான விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களை வழங்கியதுடன் தற்கொலை மற்றும் உக்காத குப்பைகளின் சேமிப்பு மையம் தொடர்பான விழிப்புணர்வுப் பிரசாரத்திலும் ஈடுபட்டனர்.

"வாழ்க்கை வாழ்வதற்கே! வாழ்வையே சாகடிக்கும் தற்கொலைக்கல்ல....!" எனும் தலைப்புடன் தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. (இ-18)

# விஜயதாஸவின் தனிநபர் பிரேரணை சிறுபான்மை கட்சிகளுக்கு முட்டுக்கட்டை

## இராதாகிருஷ்ணன் வெளிப்படுத்தல்



(ஹற்றன்)

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸராஜபக்ஷவினால்கொண்டு வரப்படவுள்ள தனிநபர் பிரேரணை சிறுபான்மை கட்சிகளுக்கு முட்டுக்கட்டையாக அமையுமென முன்னாள் அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹற்றனில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

விஜயதாஸ ராஜபக்ஷவால் தனிநபர்பிரேரணையாக கொண்டு வரப்படவுள்ள 21ஆம், 22ஆம் திருத்தச் சட்ட மூலம் சிறுபான்மைக் கட்சிகளை பொறுத்தவரையில் ஏற்புடையதாக இல்லை.

தனிநபர் பிரேரணையாக இருந்தாலும் கூட இவ்வாறான பிரேரணைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் சிறுபான்மை கட்சிகளை பொறுத்தளவில் அவர்களுடைய நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது தான் எதிர்பார்ப்பாகும்.

எங்களுடைய பிரச்சினைகளை முக்கியமாக பேசக்கூடிய இடமாக இருப்பது நாடாளுமன்றம். எனவே நாடாளுமன்றத்தில் எங்களுடைய அங்கத்துவத்தை பாதிக்கின்ற வகையில் கொண்டு வரப்படும் எந்தவொரு சட்டமூலமாக இருந்தாலும், அதனை நாங்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

ஏனென்றால் எங்களை பொறுத்தமட்டில் கடந்த காலங்களில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் சிறுபான்மை கட்சிகளாக இருந்தாலும் சரி, சிறுபான்மைக் மக்களாக இருந்தாலும் சரி தங்களுடைய நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தின் ஊடாக பல முக்கியமான விடயங்களை சாதித்திருக்கின்றார்கள்.

குறிப்பாக எங்களை பொறுத்தவரையில் மலையகத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணி கடந்த காலங்களில் பல்வேறு விடயங்களைச் சாதித்திருக்கின்றது.

எனவே இதற்கெல்லாம் காரணமாக அமைந்தது எங்களுடைய நாடாளுமன்ற பிரதிநிதித்துவம்.

எனவே நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்திற்கு பாதிப்பு ஏற்படும் என்று சொல்லப்படுகின்ற பொழுது அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.



இந்த இரண்டு சட்ட மூலங்களும் எங்களுடைய சிறுபான்மை மக்களுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். ஏற்கனவே இருந்த சட்ட மூலத்தின் படி 5 வீதமான வாக்குகள் பெற்றுக்கொண்டால் ஒரு நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்ள முடியுமென்ற நிலைமையே உள்ளது. இன்று அது 12.5 வீதமாக அதிகரிக்கப்படுகின்றமையானது சிறுபான்மை மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே எந்தக் காரணம் கொண்டும் இதனை ஏற்றுக் கொள்ள முடியாது.


எதிர்காலத்தில் இவ்வாறான சட்டமூலங்களை நாடாளுமன்றத்தில்கொண்டு வருகின்ற பொழுது சிறுபான்மை கட்சிகளுடன் கலந்தாலோசித்து அவர்களை பாதிக்காத வகையில் இந்த சட்டமூலங்கள் கொண்டு வரப்படுமாக இருந்தால் அதற்கு எங்களுடைய முழுமையான ஆதரவை வழங்க தயாராக இருக்கின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஆசிரியர் நியமனக் குழப்பத்திற்கு தீவிரவாதி சஹ்ரானே காரணம்

## உலமா கட்சி குற்றச்சாட்டு

(நிந்தவூர்)

மௌலவி ஆசிரியர் நியமனம் காலதாமதம் ஆவதற்கு காரணகர்த்தா தீவிரவாதி சஹ்ரானே என முஸ்லிம் உலமா கட்சித் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் குற்றம் சாட்டினார்.



கல்வி அமைச்சர் டளஸ் அழகப்பெருமவின் மௌலவி ஆசிரியர் நியமன துரித முன்னெடுப்புக்களுக்காக கிழக்கு மாகாண மௌலவிமாரின் பாராட்டு நிகழ்வு முஸ்லிம் உலமா கட்சியின் ஏற்பாட்டில் நிந்தவூர் பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கிழக்கு மாகாண மௌலவிமாரின் பாராட்டு நிகழ்வு உலமா கட்சியின் அங்கத்துவ மௌலவிமார்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

இதற்காக முயற்சியெடுக்கும் கல்வி அமைச்சருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ,பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கும் உலமாக்களின் பகிரங்க ஆதரவை வழங்கும் கடமை எம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

கடந்த காலங்களில் மௌலவி ஆசிரியர் நியமனங்கள் அரசியல் ரீதியாக நோக்கப்பட்டாலும் அண்மையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி சஹ்ரானின் நடவடிக்கை காரணமாக தான் குறித்த நியமனங்கள் காலதாமதமானது.

எமது கட்சி தற்போதைய ஆட்சியின் பங்காளராக உள்ளது. மௌலவி ஆசிரியர் நியமனத்தை இந்த அரசாங்கம் வழங்க இருப்பதனால் இனவாத அரசாங்கமாக எவரும் பார்க்க முடியாது.

அரசாங்கம் என்பது எதிர்பார்ப்புக்களுடன் தான் இயங்குகின்றது. அதனை நாம் விளங்கி கொள்ள வேண்டும். புதிய ஜனாதிபதி, பிரதமர் , கல்வி அமைச்சரின் பூரண ஆதரவுடன் மீளவும் அந் நியமனத்தை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1937

### அஸ்வின்




### பூஜா



அந்த காலத்தில் விடிய விடிய மண்ணை நோண்டி தண்ணீர் எடுத்தனர்...
இந்த காலத்தில் விடிய விடிய போனை நோண்டி கண்ணீர் வடிக்கின்றனர்...

### அனுருத்




தம்பி யாரையாச்சும் லவ் பண்றீங்களா?




மேரேஜ் ஆகி ரெண்டு பேபி இருக்கு அண்ணா..

### நந்தினி




சீட்டு தான் காலியாக இருக்கே உக்கார வேண்டியது தானே.. ஏன் நீ மேல சாஞ்சி தூங்குறதுக்கு ஆள் இல்லையா...

### நிஷா



என் வீட்டுக்கு வெளக்கேத்த வருவியானு கேட்டேன்
வெளக்கமாத்த எடுத்துட்டு வர்றா...
ஒருவேளை வீட்ட பெருக்கிட்டு வெளக்கேத்துவாளோ?


### ஆதி



விரும்பியதைத் தான் பேச வேண்டுமானால் பொய் மட்டும் தான் பேச வேண்டும். விரும்பியபடி தான் நடக்க வேண்டுமென்றால் நடிக்கத்தான் வேண்டும்..!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பெரும்பான்மைவாதம் தொடர்வது பேராபத்து!



## தமிழ்,முஸ்லிம் தரப்புக்கள் கூட்டாக எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் பிரதிபலிப்புக்களை அடியொற்றி தொடர்ந்தும் பெரும்பான்மை வாதத்தை முன்னிலைப்படுத்தி செயற்பட்டுக் கொண்டிருப்பதானது இனங்கள் மென்மேலும் துருவப்படுத்தப்படும் பேராபத்தையே தோற்றுவிக்கும் என்று தமிழ், முஸ்லிம் தரப்புக்கள் எச்சரித்ததோடு நாட்டின் சுபீட்சத்தையும் எதிர்காலத்தையும் கருத்திற்கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மன நிலையிலும் அவரது போக்கிலும் மாற்றங்கள் ஏற்படவேண்டியது அவசியம் என்றும் அத்தரப்புக்கள் வலியுறுத்தின.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆற்றிய அக்கிராசன உரையின்போது, குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக இனவாத அரசியலை முன்னெடுத்தவர்கள் தோற்கடிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே பெரும்பான்மை மக்களின் எதிர்பார்ப்புக்களை என்றும் மதிக்க வேண்டும். அப்போது தான் மக்களின் இறையாண்மையைப் பாதுகாக்க முடியும் என்று குறிப்பிட்டார். அத்துடன் ஒற்றையாட்சியைப் பாதுகாப்பேன் என்றும் பௌத்தத்திற்கான முதன்மைத்தானத்தைக் காப்பேன் என்றும் உறுதியளித்தார்.

இவ்விடயங்கள் தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுதீன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் ஆகியோர் கொழும்பு ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

### எம்.ஏ.சுமந்திரன் எம்.பி




இனம் சார்ந்த கொள்கையுடன் செயற்பட்டு வரும் அரசியல் கட்சிகள் இந்த நாட்டில் பிரிவினையைத் தோற்றுவிக்கின்றன என்ற நிலைப்பாட்டினை ஜனாதிபதி தனது உரையில் வெளிப்படுத்துகின்றார்.

அத்துடன் இனம்சார்ந்து செயற்படும் அரசியல் கட்சிகள் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்திகளாக இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற தொனியுடன் அவர்களைத் தீவிரவாதிகளாகவும் சித்திரித்துள்ளார்.

இலங்கை பாரம்பரிய பல்லினக் குழுமங்களைக் கொண்ட நாடாகும். அவ்வாறான பன்மைத்துவ நாட்டில் தனக்கு வாக்களித்த பெரும்பான்மை மக்களின் எதிர்பார்ப்பினை நிறைவேற்றும் வகையிலேயே அனைத்து இனக் குழுமங்களும் செயற்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டினை எடுப்பது பொருத்தமானதொன்றல்ல.

இவ்வாறான நிலைப்பாடானது பேரினவாதச் சிந்தனையின் வெளிப்பாடாகவே இருக்கின்றது. ஆகவே அந்தக்கருத்தை ஏற்றுக் கொள்ளமுடியாது. இத்தகைய நிலைப்பாடுகள் தொடருகின்ற போது இனங்களுக்கிடையிலான விரிசல்கள் மேலும் அதிகரித்துச் செல்லும் நிலைமையே ஏற்படும் என்பதை ஜனாதிபதி புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

### ரவூப் ஹக்கீம் எம்.பி



புதிய ஜனாதிபதி ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற நாள் முதல் தற்போது வரையில் பெரும்பான்மையின ஆதரவு என்ற மன நிலையிலேயே தான் அனைத்து விடயங்களையும் அணுகி வருகின்றார். ஆரம்பத்திலேயிருந்தான இந்த அணுகுமுறையில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையில் மக்களின் தீர்ப்பினை மதிக்க வேண்டியது அரசியல் தலைமையொன்றின் கடமையாகின்றது. அவ்வாறிருக்க அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி புஷ்ஷின் நிலைப்பாட்டினை ஒத்தவாறு, தனக்கு வாக்களிக்காதவர்கள் அனைவரும் தனக்கு எதிரானவர்கள் என்ற மனநிலையில் செயற்படுவது இந்த நாட்டிற்கு பொருத்தமற்றதொரு செயற்பாடாகும். மேலும் இந்த மனநிலைப்போக்கினை வரலாறு நிச்சயமாக பொய்ப்பிக்கும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

தனக்கு வாக்களிக்காத மக்களின் அபிலாஷைகளை உணர்ந்து அவர்களையும் தன்னுடன் அடுத்துவரும் காலத்தில் எவ்வாறு அரவணைத்துச் செல்வதென்பது பற்றிச் சிந்திக்கும் மன நிலை தற்போது வரையில் உருவாகாது இருக்கின்றமையானது ஆரோக்கியமான விடயமொன்றல்ல. தேர்தல் வெற்றிக்குப் பின்னரும் இனம்சார்ந்து செயற்படும் அரசியல் தரப்புக்களை தீவிரவாதிகள் என்று முத்திரையிடுவது கவலைக்குரிய விடயமாகும்.

தமது இனம் சார்ந்து செயற்படும் சிறுபான்மை தேசிய இனங்கள் இனவாதக் தரப்புக்கள் என்றால் பெரும்பான்மை இனம் சார்ந்து செயற்படும் கட்சிகளை எவ்வாறு அழைப்பது என்ற கேள்வியும் இங்கு எழுகின்றது. இத்தகைய போக்குகள் மக்கள் மத்தியில் பீதியான மனநிலையையே தோற்றுவிக்கின்றன.

ஆகவே ஜனநாயக முடிவுகளை ஏற்றுக்கொள்ளாது எதிராளிகள் என்ற போக்கிலும் மொழி, மதம், இனம் என அனைத்திலும் பெரும்பான்மைவாத எண்ணப்போக்கில் தலைவர்கள் பிரதிபலிக்கின்றமையானது பல்லினங்கள் வாழும் இந்த நாட்டில் அவற்றுக்கிடையில் மென்மேலும் துருவப்படுத்தல்களையே அதிகரிக்கச் செய்யும். அவ்வாறான நிலைமைகள் மோசமான பின்விளைவுகளையே ஏற்படுத்தும்.

### றிசாத் பதியுதீன் எம்.பி



முஸ்லிம்கள் என்றுமே வன்முறையை விரும்பியவர்கள் கிடையாது. பிரிவினையை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. ஐக்கிய இலங்கைக்குள் தலைநிமிர்ந்து வாழவே விரும்புகின்றார்கள். ஆகவே அவர்களின் விருப்பு வெறுப்புக்களை வெளிப்படுத்துவதற்கு சகல உரித்தும் அவர்களுக்கு உள்ளது.

தமது ஜனநாயகக் கடமையில் அவர்களின் வெளிப்பாடுகளை நாட்டின் எதிர்காலம்பற்றிய கரிசனை கொண்டிருக்கும் ஜனாதிபதி தவறாகப் புரிந்துகொள்வதே தவறாகும்.

மேலும் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இனவாத அரசியலை கைவிடுமாறு தமது இனம் சார்ந்து செயற்படும் சிறுபான்மை தரப்புக்களை இலக்காக வைத்துக் கூறுகின்றார்.

ஆனால் பெரும்பான்மை தேசிய கட்சிகளின் வெளிப்பாடுகளையும் அவர் கவனத்தில் கொள்ள வேண்டியது கட்டாயமாகின்றது.

இந்த நாட்டினை பொருளாதார ரீதியாக முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்பதையே இலக்காகக் கொண்டிருப்பதாகக் கூறும் ஜனாதிபதி, அதற்கான அடிப்படைகளையே முதலில் மேற்கொள்ள வேண்டும்.

சிங்கப்பூர், மலேசியா போன்ற பல்லின நாடுகள் அபிவிருத்தியில் மேலோங்கித் திகழ்வதற்கு அடிப்படையாக இனங்களுக்கிடையிலான நல்லிணக்கமே காணப்படுகின்றது.

ஆகவே வாக்களிப்பினை மையப்படுத்திய மனநிலையில் செயற்படுவதானது இனங்களுக்கிடையில் மேலும் இடைவெளிகளையே ஏற்படுத்தும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

### பழனி திகாம்பரம் எம்.பி



உள்நாட்டுப்போரை வெற்றி கொண்ட அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் சிறுபான்மை மக்களின் மனங்களை வெற்றி கொள்ள முடியவில்லை. இனங்களுக்கிடையில் ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப முடிந்திருக்கவில்லை. இதன் காரணத்தாலேயே அவருடைய ஆட்சி சரிந்தது.

இந்நிலையில் அவருடைய சகோதரராக இருக்கும் தற்போதைய ஜனாதிபதி கோட்டாப்பய ராஜபக்ஷவாவது சிறுபான்மை மக்களின் மனங்களை வெற்றி பெறுவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மாறாக பெரும் பான்மையின சிந்தனையில் செயற்பட விழைவதானது இனங்களுக்கு இடையிலான விரிசல்களை மேலும் அதிகரிக்கச் செய்யும் எனத் தெரிவித்தார். (இ-7)

# ஹரீன் பிறப்பித்த உத்தரவை இரத்துச் செய்ய நீதிமன்றில் ரிட்மனுவை தாக்கல் செய்த திலங்க





(கொழும்பு)

முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் பிறப்பித்த உத்தரவை செல்லாது என அறிவிக்குமாறு இராஜாங்க அமைச்சர் திலங்க சுமதிபால மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தார்.


இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் முன்னாள் தலைவரான திலங்க சுமதிபாலவுக்கு இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தின் செயற்பாடுகளில் ஈடுபட கடந்த அரசாங்கத்தில் விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்த ஹரீன் பெர்னாண்டோ தற்காலிகத் தடை விதித்தார்.

இந்நிலையிலே இந்த ரிட் மனு ஊடாக திலங்க சுமதிபால, முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் பிறப்பித்த உத்தரவை செல்லாது என்று நிராகரிக்க நீதிமன்றத்தைக் கேட்டுக்கொண்டார். (இ-7)






# கடமையைச் செய் உயர்வடைவாய்



கடமைகளைச் செய்வது தான் நாம் உயர்வு பெறுவதற்கு உரிய ஒரே வழியாகும். அவ்விதம் நமது கடமைகளைச் செய்வதன் மூலம் நம்மிடம் இருக்கும் வலிமையைப் பெருக்கிக்கொண்டே சென்று, இறுதியில் நாம் உயர்ந்த நிலையை அடைந்து விடலாம்.

இளம் துறவி ஒருவர் காட்டிற்குச் சென்றார். அங்கு அவர் தியானம், வழிபாடு, யோகப்பயிற்சி போன்றவற்றில் நீண்ட காலம் ஈடுபட்டிருந்தார். ஒரு நாள் அவர் ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தார். அப்போது அவர் தலைமீது சில உலர்ந்த சருகுகள் வீழ்ந்தன. அவர் நிமிர்ந்து பார்த்தார். அங்கே மரக்கிளை ஒன்றில் ஒரு காகமும் கொக்கும் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. அவருக்கு வந்ததே கோபம்! கோபத்துடன் அவர், என்ன! எவ்வளவு துணிச்சல் இருந்தால் என் தலைமீது சருகுகளை உதிர்ப்பீர்கள்! என்று கூறியபடியே, அந்தப் பறவைகளைப் பார்த்தார். யோகி அல்லவா! அவரது கண்களிலிருந்து ஒரு நெருப்பு மின்னல்போல் மேலெழுந்து சென்று, அந்தப் பறவைகளை எரித்துச் சாம்பலாக்கிவிட்டது! அவருக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. பார்வையாலேயே பறவைகளை எரிக்கும் தமது ஆற்றலைக் கண்டு, அவருக்குத் தலைகால் புரியாத மகிழ்ச்சி ஏற்பட்டது.

சிறிது நேரத்திற்குப் பிறகு அந்தத் துறவி, உணவிற்காக அருகில் இருக்கும் ஊருக்குச் சென்றார். அங்கு ஒரு வீட்டின் முன் நின்று, அம்மா, பிச்சை இடுங்கள்! என்று கேட்டார். மகனே! கொஞ்சம் இரு என்று வீட்டின் உள்ளே இருந்து ஒரு குரல் வந்தது. இதைக் கேட்ட அந்தத் துறவி தனக்குள், பெண்ணே, என் சக்தியை நீ அறியவில்லை! என்னைக் காக்க வைக்கிறாயே! உனக்கு எவ்வளவு தைரியம்! என்று நினைத்தார். இப்படி அவர் நினைத்ததுமே உள்ளே இருந்து மகனே, உன்னைப் பற்றி அவ்வளவு பெரிதாக நினைத்துக்கொள்ளாதே! இங்கே இருப்பது காக்கையும் அல்ல, கொக்கும் அல்ல! என்று குரல் வந்தது. துறவி திகைத்துவிட்டார். எப்படியானாலும் அவர் காத்திருக்கத்தான் வேண்டியிருந்தது. கடைசியாக அந்தப் பெண் வெளியில் வந்தாள். துறவி அவள் கால்களில் வீழ்ந்து வணங்கி, அம்மா, நான் மனதில் நினைத்ததை நீங்கள் எப்படி அறிந்தீர்கள்? என்று வினவினார். அதற்கு அவள், மகனே, உன்னைப் போல் எனக்கு யோகமோ தவமோ எதுவும் தெரியாது. அன்றாடம் என் கடமைகளைச் செய்துகொண்டிருக்கும் ஒரு சாதாரண பெண் நான். என் கணவர் நோய்வாய்ப்பட்டிருக்கிறார். நான் அவருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தேன். அதனால்தான் உன்னைக் காக்க வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

நான் என் கடமைகளை வாழ்நாள் முழுவதும் மனப்பூர்வமாகச் செய்து வருகிறேன். திருமணத்திற்கு முன்பு பெற்றோருக்கு என் கடமையைச் செய்தேன். இப்போது என் கணவருக்குச் செய்து வருகிறேன். என் கடமைகளை நான் செய்து வந்த காரணத்தால் என் ஞானக்கண் திறந்து விட்டது. அதன்மூலம்தான் நான் உன் எண்ணங்களைப் புரிந்துகொள்ள முடிந்தது. காட்டில் உனக்கு நடந்ததையும் தெரிந்து கொண்டேன். இதற்கு மேலும் நீ ஏதாவது தெரிந்து கொள்ள விரும்பினால் இன்ன நகரத்திலுள்ள கடைத்தெருவுக்குச் செல். அங்கே ஒரு வியாதனை (இறைச்சி வியாபாரி) நீ சந்திப்பாய். அவன் உனக்குப் போதிப்பான் என்று கூறினாள். முதலில் அந்தத் துறவி, ஒரு வியாதனிடம் நான் போவதா? என்றுதான் நினைத்தார். ஆனால் சற்று முன்பு நடந்த நிகழ்ச்சியால் அவரது ஆணவம் சற்று விலகியிருந்தது. எனவே நகரத்திற்குச் சென்றார். கடைத்தெருவைத் தேடிக் கண்டுபிடித்து அங்கே சென்றார். அங்கே கொழுத்த பருமனான ஒருவன் பெரிய ஒரு கத்தியால் இறைச்சியை வெட்டியபடியே, இறைச்சியை விலை பேசுவதும் விற்பதுமாக இருந்தான்.

அடக் கடவுளே! இந்த மனிதனிடமிருந்தா நான் உயர்ந்த கருத்துகளைக் கற்றுக்கொள்ளப் போகிறேன்! இவனைப் பார்த்தால் அசுரனின் அவதாரம்போல் தோன்றுகிறதே! என்று நினைத்து துறவி அதிர்ச்சி அடைந்தார்.

இதற்கிடையில் வியாதன் துறவியைக் கவனித்துவிட்டு, ஓ சுவாமி, அந்தப் பெண்மணி உங்களை இங்கே அனுப்பினார்களா? இங்கு சிறிது நேரம் அமர்ந்திருங்கள், என் வியாபாரத்தை முடித்துவிட்டு வருகிறேன் என்றான். இங்கே என்ன நடக்கப் போகிறதோ? என்று நினைத்துக்கொண்டே துறவி அங்கு உட்கார்ந்திருந்தார். நீண்ட நேரம் கழிந்தது. வியாதனின் வேலை முடிந்தது. அவன் பணத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு துறவியிடம் வந்து, வாருங்கள் நாம் வீட்டிற்குப் போகலாம்! என்றான். வியாதன் வீட்டை அடைந்ததும் துறவி அமர்வதற்கு இருக்கை ஒன்றை அளித்து, இங்கேயே இருங்கள், வந்து விடுகிறேன்! என்று கூறிவிட்டு உள்ளே சென்றான். பின்னர் அவன் வயது முதிர்ந்த தன் தந்தையையும் தாயையும் குளிப்பாட்டி, உணவூட்டி, அவர்கள் மனம் மகிழும்படி பலவகையான சேவைகளைச் செய்தான். பிறகு துறவியிடம் வந்தான்.

துறவி அவனிடம் ஆன்மாவைப் பற்றியும் இறைவனைப் பற்றியும் சில கேள்விகளைக் கேட்டார். வியாதன் அதற்குத் தந்த விளக்கம் வியாத கீதை என்ற பெயரில் மகாபாரதத்தில் இடம் பெற்றிருக்கிறது. பின்னர் துறவி வியாதனைப் பார்த்து, நீங்கள் ஏன் வியாதனாக இருக்கிறீர்கள்? இது இழிவான தொழில் ஆயிற்றே! என்று வினவினார். அதைக் கேட்ட வியாதன் துறவியை நோக்கி, மகனே, கடமைகளில் எதுவும் இழிந்ததும் இல்லை, கேவலமானதும் இல்லை. என்னுடைய பிறப்பு, கசாப்புத் தொழில் செய்யும் இந்தச் சூழ்நிலையில் என்னை வைத்திருக்கிறது. எனக்குப் பற்று எதுவும் இல்லை. என் பெற்றோரை மகிழ்விப்பதற்கு உரிய சேவைகள் எல்லாவற்றையும் நான் செய்கிறேன். உங்கள் யோகம் எனக்குத் தெரியாது. நான் வீட்டைத் துறந்து காட்டிற்குப் போகவில்லை. என் நிலைக்கு உரிய என் கடமைகளை நான் பற்றின்றி செய்தேன்.

அதனால் எனக்குக் கிடைத்தவற்றையே நீங்கள் என்னிடம் பார்க்கிறீர்கள், கேட்கிறீர்கள் என்று கூறினான்.

## விடுகதைகளும் விடைகளும்

- அடி மலர்ந்து நுனி மலராத பூ. அது என்ன?

**வாழைப்பூ**

- பேசாத வரை நான் இருப்பேன். பேசினால் நான் உடைந்துவிடுவேன். நான் யார்?

**அமைதி**

- அடித்தால் விலகாது. அணைத்தால் நிற்காது. அது என்ன?

**தண்ணீர்**

- நடக்கத் தெரியாதவன், நட்டுவனுக்கு வழி காட்டுகிறான் அவன் யார்?

**கைகாட்டி**

- தலையில் கீரீடம் வைத்த தங்கப்பழம் அது என்ன?

**அன்னாசிப்பழம்**

- ராஜா, ராணி உண்டு நாடு அல்ல. இலைகள் பல உண்டு. தாவரம் இல்லை! அது என்ன?

**காட்ஸ்**

- கந்தல் துணிக்காறி முத்துப் பிள்ளைகள் பெற்றாள் அவள் யார்?

**சோளப்பொத்தி**

- மூன்றெழுத்துப் பெயராகும். முற்றும் வெள்ளை நிறமாகும் அது என்ன?

**பஞ்சு**

- கழுத்து உண்டு. தலையில்லை; உடல் உண்டு. உயிர் இல்லை; கையுண்டு. விரல் இல்லை அது என்ன?

**சட்டை**

- கோணல் எத்தனை இருந்தாலும் குணமும் குறியும் மாறாது. அது என்ன?

**கரும்பு**

- மணல் வெளியில் ஓடுது. தண்ணீர் கேட்காத கப்பல் அது என்ன?

**ஒட்டகம்**

- பேசுவான் நடக்கமாட்டான்; பாடுவான் ஆடமாட்டான் அவன் யார்?

**வானொலிப் பெட்டி**

- சங்கீதம் பாடும் சல்லாபம் செய்யும் சமயத்தில் ரத்தம் குடிக்கும். அது என்ன?

**கொசு**

- நான்தான் சகலமும். என்னைப் பார்க்க முடியாது, பிடிக்கவும் முடியாது. எனக்கு வாயில்லை, ஆனால் நான் ஓசை எழுப்புவேன். நான் யார்?

**காற்று**

- கோயிலுக்குப் போனானாம் எங்க தம்பி தீர்த்தம் விட்டானாம் தங்கத் தம்பி. அது என்ன?

**தேங்காய்**

## பழமொழிகள்

- உடல் உள்ள வரையில் கடல்கொள்ளாத கவலை.
- உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது.
- உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா
- உடையவன் பாரா வேலை ஒரு முழங் கட்டை.
- உண்ட உடம்பிற்கு உறுதி, உழுத புலத்தில் நெல்லு.
- உண்டு கொழுத்தால் நண்டு வலையில் இராது.
- உண்ணாச்சொத்து மண்ணாய்ப்போகும்.
- உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?
- உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை.
- உலோபிக்கு இரட்டை செலவு.
- உளவு இல்லாமல் களவு இல்லை.
- உள்ளது சொல்ல ஊருமல்ல நல்லது சொல்ல நாடுமல்ல,
- உள்ளது போகாது இல்லது வாராது.
- உள்ளம் தீயெரிய உதடு பழஞ்சொரிய.
- உறியிலே வெண்ணெய் இருக்க நெய்க்கலைவானேன்.
- ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி.

பிழையைச் சரிப்படுத்திக் கொள்ள முயற்சி செய்வதில் அவமானம் இல்லை.
– ராஜாஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களைச் சங்காரம் செய்தபோது கொடுமை என்று சொல்லாக் கயமை

பேரினவாதம் தொடர்வது ஆபத்தானது என தமிழ், முஸ்லிம் அரசியல் தரப்புகள் கருத்துரைத்துள்ளன.

பேரினவாத சிந்தனை மேலோங்கிச் செல்வது சிறுபான்மை இனங்களுக்கு ஆபத்தானதென்பது மறுதலிக்க முடியாத உண்மை.

அதேவேளை பேரினவாதம் இன்று நேற்று புத்துருவாக்கம் பெற்றதல்ல. மாறாக காலத்துக்குக் காலம் சிறுபான்மைத் தமிழ் மக்களை வதைக்கின்ற போதெல்லாம் பேரினவாதம் உருவேறிக் கொண்டது.

எனினும் அது குறித்து முஸ்லிம் அரசியல் தரப்புகள் கவலையோ கண்டனமோ தெரிவிக்கவில்லை.

மாறாக, தமிழர்களைச் சிங்களவர்கள் வதைத்துச் சங்காரம் செய்ய, அந்த வேளையில் சிங்களப் பேரினவாதத்துடன் சேர்ந்து அரசியல் பதவிகளையும் வேலைவாய்ப்புகளையும் பெற்றுக் கொண்டதுடன் படைத்தரப்பில் இணைந்து தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளையும் முஸ்லிம் தரப்புகள் செய்தன.

இதற்கு மேலாக, அவர்கள் அடிபடட்டும். நாங்கள் எங்கள் பொருளாதாரத்தையும் இனத்தையும் பெருக்கிக் கொள்வோம் என்ற இலக்கோடு முஸ்லிம் அரசியல் தரப்புகள் வியூகம் அமைத்துக் கொண்டன.

தவிர, வன்னிப் பெருநிலப்பரப்பில் அப்பாவித் தமிழ் மக்களைச் சிங்களப் பேரினவாதம் கொன்று குவித்தபோதெல்லாம் முஸ்லிம் அரசியல்வாதிகள் வாய்திறக்கவில்லை.

வன்னியில் கொத்துக் கொத்தாகத் தமிழ் மக்கள் கொல்லப்பட்டபோது இஃது கொடுமை, பேரினவாதம் பேயாட்டம் ஆடுகிறது. இதனை நிறுத்த வேண்டுமென முஸ்லிம் அரசியல்வாதிகளில் யாரேனும் ஒருவர் கூறியிருந்தால்கூட அது தமிழ் மக்களுக்கு ஆறுதலைக் கொடுத்திருக்கும்.

ஆனால் அவர்கள் அதனைச் செய்யாமல், சிங்களப் பேரினவாதத்துடன் சேர்ந்து தங்கள் இனத்தின் தேவைகளை நிறைவு செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

ஆனால் இன்று நிலைமை வேறுவிதமாயிற்று. கால சுழற்சியில் முஸ்லிம் இனத்தை ஓரங்கட்டியே ஆகவேண்டுமென சிங்களப் பேரினவாதம் முடிவு செய்து விட்டது.

இனி, சிங்களவர்கள் முஸ்லிம் இனத்தவர்களை இம்மியும் நம்பமாட்டார்கள் என்பது சர்வநிச்சயம்.

இந்நிலையில் பேரினவாதம் தொடர்ந்தால் அது சிறுபான்மை இனத்துக்கு ஆபத்து என முஸ்லிம் அரசியல்வாதிகள் கூறுவது வேடிக்கையானது.

அதிலும் வேடிக்கை, எங்கள் தமிழ் அரசியல்வாதிகளும் அவர்களுடன் சேர்ந்து சல்லாரி போடுவதுதான்.

தமிழர்களைப் பொறுத்தவரை சிங்களப் பேரினவாதம் பல ஆண்டுகளாக எழுச்சி பெற்று வருகிறது.

அந்த எழுச்சி தமிழ் இனத்தை மட்டும் தாக்கியபோது கிளித்தட்டு விளையாடி மகிழ்ந்த முஸ்லிம்களால் இப்போதுதான் பேரினவாதத்தைப் புரிந்து கொள்ள முடிகிறதாம்.

ஆக, அவர்களின் விடயத்தில் தமிழ் அரசியல்வாதிகள் வாய்பொத்திக் கொண்டிருப்பதுதான் நல்லது.

# வடக்கு கிழக்கு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி கூட்டமைப்புடன் பேச வரவேண்டும்

## சித்தார்த்தன் எம்.பி வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நிலையான அபிவிருத்தி ஏற்பட வேண்டுமாக இருந்தால் உண்மையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லப்போவதாக இருந்தால் பேச்சுவார்த்தைகளினூடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமகால அரசியல் நிலைமைகளில் ஜனாதிபதி வெளிப்படுத்திவருகின்ற கருத்துக்கள் அல்லது அவருடைய நிலைப்பாடுகள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், “ஜனாதிபதி கோட்டாபயவைப் பொறுத்த வரையில் இன்றல்லாது முன்பிருந்தே தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக மாறுபட்ட கருத்துக்களையே வெளிப்படுத்தி வருகின்றார். இதன் காரணமாகவே தமிழ் மக்கள் அவருக்கு வாக்களிக்கவில்லை.

இருந்தாலும் அவர் இந்நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார். இந்நிலையில் நாட்டின் அபிவிருத்தி பற்றி அவர் கதைக்கிறார். ஆகவே நாடு அபிவிருத்தியடைய வேண்டுமாக இருந்தால் உண்மையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். நாட்டில் ஒரு சுமுகமான நிலைமை ஏற்பட்டால் தான் வெளிநாடுகளும் முதலீடு செய்ய முன்வரும். அதனூடாகவே அபிவிருத்தி நோக்கிப் பயணிக்க முடியும்.

மேலும் இனப்பிரச்சினை விடயத்தில் ஜனாதிபதி வேறு நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி வந்தாலும் இந்த ஆட்சியில் இன்று பிரதமராக இருக்கின்ற அவருடைய சகோதரர் மகிந்த ராஜபக்ஷ கூட தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு குறித்து இந்தியா உட்பட பல்வேறு தரப்பினரிடம் சொல்லியுள்ளார்.

ஆகையால் இன்று ஜனாதிபதி என்ன சொல்லியிருந்தாலும் நாங்கள் எங்களுடைய பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும். ஜனாதிபதியும் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும்.

அடுத்த தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பலமான அமைப்பாக உருவாகினால் சமபலத்துடன் நின்று பேசக்கூடிய வாய்ப்பு ஏற்படும். இதனடிப்படையில் ஜனாதிபதியுடன் பேச வேண்டுமென கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கேட்டிருக்கின்றார். ஆகவே வடக்கு கிழக்கு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எங்களுடன் பேசத்தான் வேண்டும், பேசாமல் இங்கிருந்து தனியாக எதனையும் செய்ய முடியாது.

இதேவேளை, கடந்த காலங்களிலும் இவரைப் போல கடுமையான நிலைப்பாடுகளை எடுத்த சிங்களத் தலைவர்கள் எல்லாம் பின்பு அந்த நிலைப்பாடுகளிலிருந்து விலகி ஒப்பந்தங்களை எழுதிய சரித்திரங்கள் எல்லாம் உள்ளது” என்று தெரிவித்துள்ளார்.

(ம-3)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமைகாலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** மல்லாவியிலிருந்து கல்விளான் வரை, ஒட்டறுத்த குளத்திலிருந்து பாண்டியன்குளம் ஊடாக மூன்று முறிப்பு வரை, துணுக்காயிலிருந்து தெனியங்குளம் வரை, பிள்ளையார் அரிசி ஆலை, ஆலங்குளம் இராணுவமுகாம், 653ஆம் படைப்பிரிவு இராணுவ முகாம், வன்னி வைரம், மொடர்ன் அரிசி ஆலை ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், சாளம்பைக்குளம் ஆகிய இடங்களிலும்,.

**மன்னார் பிரதேசத்தில்** கரைசலிலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னார் Palmyrah house, தலைமன்னார வைத்தியசாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ்தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, Palmyrah house கரைசல் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

# மீசாலைச் சந்தியில் விபத்து வயோதிபர் படுகாயம்

(கொடிகாமம்)

மீசாலைச் சந்தியில் ஏ9 வீதியில் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெற்ற விபத்தில் மீசாலை வடக்கைச் சேர்ந்த சி.செல்லத்துரை (வயது-64) என்பவர் காயங்களுக்குள்ளான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துவிச்சக்கரவண்டியில் சென்ற வயோதிபரை இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து மோதியதில் காயங்களுக்குள்ளான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ம-3.114)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

பகைவனால் ஏற்படும் தீமையைவிட அடக்கம் இல்லா மனமே ஒருவனுக்கு அதிகமான தீமையைச் செய்கிறது.
-தம்மபதம்

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மதமும் விஞ்ஞானமும்



கடவுளைப் பற்றி இதுவரை எல்லா மதங்களிலும் என்ன சொன்னார்கள்? எங்கும் உள்ளவன் (Omnipresent) என்றார்கள். எல்லாவற்றுக்குள்ளும் ஊடுருவி அணுவுக்குள்ளும் இயக்க சக்தியாக இருப்பவன். அவன் தான் எல்லாம் அறிந்தவன் (Omniscient) எல்லாம் வல்லவன் (Omnipotent) என்றார்கள். இவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு அவரவர் மதத்தில் என்னென்ன சொல்லிக் கொடுக்கிறார்களோ அதற்கும் இந்தக் கடவுள் தன்மைக்கும் ஒத்துக் கொள்கிறதா என்று பாருங்கள்.

எந்த இடத்தில் யார் சொல்வது ஒத்துக் கொள்கிறதோ அதுதான் சரி. ஆனாலும் அதை அப்படியே எடுத்துக் கொண்டால் போதாது. இன்றைக்கு உலகில் விஞ்ஞானம் வளர்ந்து விட்டது. இந்த விஞ்ஞான ஆராய்ச்சியின் மூலமாக அந்தக் கடவுள் தன்மையானது இந்தப் பிரபஞ்சத்தை எந்த முறையிலே நடத்துகிறது என்பதையும், அதன் இயக்கம், நோக்கம் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

அது தெரியாமல் அப்படியே பழைய கருத்துக்களையே வைத்துக் கொண்டால், மீண்டும் மனித அறிவு முன்னேற்றத்தில் முரண்படும். இப்பொழுது நம் உடலில் இந்த மாதிரி நடக்கிறது என்று சொன்னால் அது கடவுளால் நடக்கின்றது என்று சொல்லி விட்டால் போதாது. அந்தக் கடவுள் இந்த அணுவுக்குள்ளும் எம்மாதிரியாக இருந்து கொண்டு அதை நகர்த்துகிறான், சுற்றுகிறான், விளங்குகின்றான் அல்லது தோற்றப் பொருட்களைக் கூட்டுகின்றான், குறைக்கின்றான் என்பதைத் தெரிந்து கொள்ளும் அளவுக்கு ஒரு அறிவு இக்காலத்தில் வளர வேண்டும்.

# அரையிறுதிக்குள் நுழைந்தது ஆனைக்கோட்டை யூனியன்



யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கோண்டாவில் வடக்கு மத்திய சனசமூக நிலையத்தின் வைரவிழாவை முன்னிட்டு கோண்டாவில் மத்திய விளையாட்டு கழகம் நடத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நடைபெற்ற காலி றுதி ஆட்டம் ஒன்றில் ஆனைக் கோட்டை யூனியன் அணியை எதிர்த்து யாழ். போதனா வைத் தியசாலை அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 07:00 என்ற கோல் கணக்கில் யூனியன் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

யூனியன் அணி சார்பாக அபினாஸ் 03 , காந்தன் 02 , மதி, கிரியோன் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக் கொடுத் தனர். (க)

# அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது மயிலங்காடு ஞானமுருகன் அணி



குப்பிழான் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் மயி லங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து தாவடி காளிகாம்பாள் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:00 என்ற கோல்கணக்கில் ஞான முருகன் அணி வெற்றி பெற்று அடு த்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

ஞானமுருகன் அணி சார்பாக வகின்சன் , தீபன் ஆகியோர் தலா ஒரு கோலினை பெற்றுக் கொடுத்தனர். (க)









2019 ற்கான சர்வதேச கராத்தே போட்டி யுனிவேர்ஸல் சோட்டோ கான் கராத்தே சங்கத்தின் ஏற்பாட்டில் (USKU) இலங்கைக்கான பிரதம பயிற்சி ஆசிரியர் சென்சே. அப்துல் தவுவ் (Rauf) தலைமையில் கடந்த 28 ஆம் திகதி கொழும்பு வென்னப்புவ சேர் அல்பேட் பீரிஸ் உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.இதில் சக்குறா சோட்டோகான் கராத்தே கழகத்தைச் சேர்ந்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சுண்டிக்குளி கிறீன் பீல்ட் கராத்தே அணியினர், கொழும்புத்துறை ஜெட் லேணர்ஸ் கராத்தே அணியினர் 35 பதக்கங்களை பெற்றுக் கொண்டனர். இவர்களின் பிரதம பயிற்சி ஆசிரியர் சென்சே எஸ்.விஜ யராஜ் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

# பாடும்மீன் அணியை வீழ்த்தியது இலங்கை கடற்படை அணி





FA கிண்ணம் 16 உதைபந்தாட்ட போட்டி கடந்த 4 ஆம் திகதி கொழும்பு கனியா ஃபுட்போல் மைதானத்தில் பாடும் மீன் அணியினரை எதிர்த்து இலங்கை கடற்படை அணி மோதியது.

விளையாட்டு ஆரம்பமாகியதும் இரு அணியினரும் ஒன்றையொன்று விட்டுக் கொடுக்காது விளையாடினர். போட்டி முழுவதும் தொழில் முறையிலான இலங்கை கடற்படை அணியுடன் விளையாட்டில் சளைத்த வர்கள் அல்ல என்று கூறும் அளவிற்கு முழுமையான பலத்துடனும் முழுமையான போராட்டத்துடனும் திறமையான ஆட்டத்தினை சிறப்பாக ஆடியும் விட்டுக்கொடுக்காது விளையாடிய போதிலும் போட்டியில் வழங்கப்பட்ட அதிக நேர ஆட்டத்தின் போது இலங்கை கடற்படை அணி 1-0 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றிருந் தது. (க-106)

# பரபரப்பான ஆட்டத்தில் வென்றது இளவாலை யங்கென்றீஸ் அணி



குப்பிழான் விக்கினேஸ்வரா விளை யாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் இளவாலை யங்கென்றீஸ் அணியை எதிர்த்து இமையாணன் மத்தி அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலையும் பெற்றமையால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதை யில் 03:02 என்ற கோல் கணக்கில் யங்கென்றீஸ் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

யங்கென்றீஸ் அணி சார்பாக தனேஸ் ஒரு கோலையும் இமையாணன் மத்தி அணி சார்பாக அலெக்சன் ஒரு கோலை யும் பெற்றுக் கொடுத்தனர். (க)

## கைதான ரஞ்சன்...

நுகோகொட நீதிமன்றில் பொலிஸாரினால் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவுக்கு வெளிநாடு செல்ல நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் கைத்துப்பாக்கி ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர். (ம-3)

## கிளிநொச்சியை...

பருத்தித்துறை முனைப் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கிளிநொச்சி பன்னாங்கண்டியைச் சேர்ந்த இராமசாமி மாணிக்கராஜா (வயது-36) என்பவரே மரணமானவராவார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த மேற்படி குடும்பஸ்தர் கற்கோவளம் பகுதியில் இடம்பெற்ற மரணச் சடங்கு ஒன்றிற்கு சென்ற நிலையில் முனை கடற்பகுதியில் குளிக்கச் சென்றதாக கூறப்படுகிறது.

அங்கு குளித்துக் கொண்டிருந்தபோது சுழியில் சிக்கி இழுத்துச் சென்றதாக கூறப்படுகிறது. இதனையடுத்து தேடுதல்கள் மேற்கொண்டபோது அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காகவும் மரண விசாரணைக்காகவும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3,60)

## இனப்பிரச்சினை...

தன் வேண்டுகோள் விடுத்துள்ளார் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

முல்லைத்தீவில் இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 70ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், "ஜனாதிபதியின் கொள்கை உரைக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடினார்.

இதன்போது சிங்கள பெருபான்மை மக்கள் உங்களுக்கு வாக்களித்தனர். தமிழ் மக்கள் இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்பட வேண்டுமென எங்களுக்கு வாக்களித்தனர்.

எனவே இந்த விடயம் குறித்து நாம் பேசி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என ஜனாதிபதியிடம் சம்பந்தன் கோரிக்கை விடுத்தார். அவர் ஏற்றுக் கொண்டாரோ இல்லையோ தெரியவில்லை" என மேலும் தெரிவித்தார். (ம-3)

## கட்டுப்பாட்டை...

ஞன் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று இரவு 8.45 மணியளவில் ஏ9 வீதி, முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இதில் சாந்தபுரம் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய கருப்பையா தர்ஷன் என்ற இளைஞனே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,100)

## வெப்பத்துடனான...

தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் தற்போது வெப்ப கால நிலை நிலவுவதற்கு காரணம் காற்றின் தாக்கமே என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வழமையாக டிசம்பர், ஜனவரி மாதங்களில் ஓரளவுக்கு குளிருடனான கால நிலையே காணப்படும்.

ஆனால் தற்போது அத்தகைய நிலையை நாம் அனுபவிக்கவில்லை என்று தெரிவித்த வளிமண்டலவியல் திணைக்களத்தின் கால நிலை தொடர்பாக எதிர்வு கூறும் பிரிவின் பணிப்பாளர் அனுச வர்ணகுலசூரிய, அதற்கு விசேட காரணம் இந்தியாவில் தரை நிலப்பகுதி ஊடாக குளிர் காற்று வருவதேயாகும்.

தற்போது மலேசியா, தாய்லாந்து ஊடாக கிழக்கு வங்காள விரிகுடா பிரதேசத்திலிருந்து கடல் ஊடாக வீசும் காற்றும் வருகிறது. இதுவே இதற்கான காரணம் என்றும் அவர் கூறினார்.

எதிர்வரும் சில தினங்களில் வெப்பத்துடனான காலநிலை நிலவக்கூடும் என்றும் அவர் எதிர்வு கூறினார். (ம-3)

## கோட்டாவின்...

நேரடியாகவோ மறைமுகமாகவோ லஞ்சம் கோரப்பட்டால் 48 மணித்தியாலத்திற்குள் பணி நீக்கம் செய்யப்படுவர்.

4. பகிடிவதை செய்து சிக்கினால் 8 வருடம் பரீட்சை எழுத தடை விதிக்கப்படும்.
5. பாராளுமன்ற உறுப்பினர் 80% மேல் அமர்வுகளில் சமுகமளித்திருத்தல் வேண்டும். தவறினால் 5 வருடங்களுக்கு எந்தவித வாக்கெடுப்பிற்கும் விண்ணப்பிக்க முடியாது.
6. அரச ஊழியர்கள் சேவை துஷ்பிரயோகம் செய்தால் 48 மணி நேரத்திற்குள் பணி நீக்கம் செய்யப்படுவர்.
7. ஜனாதிபதித் தேர்தலில் ஒருவர் போட்டியிட்டு 1 வீதத்திற்கு குறைவான வாக்குகளை பெறுவாரேயானால் 1 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு தண்டப்பணமாக செலுத்த வேண்டும்.
8. அரசியல்வாதிகளின் சிபாரிசின் மூலம் வருபவர்களுக்கு வாழ் நாள் முழுதும் அரச சேவையில் இணையத்தடை.
9. வைத்தியரின் சிபாரிசு இல்லாமல் மருந்து வழங்கும் மருந்தகங்களில் அனுமதிப்பத்திரம் 48 மணித்தியாலத்திற்குள் ரத்துச் செய்யப்படும்.
10. சொத்துக்களை வாங்கி 5 வருடங்களுக்கு முன் விற்பனை செய்யப்பட்டால் விற்கப்படும் தொகையில் 50% வரியாக செலுத்தப்பட வேண்டும்.
11. மோட்டார் வாகன பொலிஸார் இரகசிய பொலிஸாரால் கண்காணிக்கப்படுவர். குற்றம் நிரூபிக்கப்பட்டால் 48 மணி நேரத்திற்குள் பணி நீக்கம்.
12. தனியார் வைத்தியசாலையில் அறவிடப்படும் கட்டணங்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படும்.

இவை அனைத்தையும் மக்களோடு மக்களாக இருக்கும் 2500 இரகசிய பொலிஸார் அவதானிப்பர்.

வழமையாக மக்களை ஏமாற்றி மக்களை அடிமையாக நடத்திய அதிகாரிகள் பலர் அதிர்ச்சியில் உள்ளதாக தென்னிலங்கை ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ம-3)

## வவுனியாவில்...

டறியப்பட்டது.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் தெரியப்படுத்தப்பட்டது.

சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த அன்னலட்சுமி (வயது - 85) என்ற மூதாட்டியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் தவறுதலாக கிணற்றுக்குள் விழுந்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,299)

## தவறான பாதை...

காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கைது செய்யப்பட்ட பின்னர், தனது டுவிட்டரில் இதைப் பதிவிட்டுள்ளார்.

எதிர்க்கட்சி எம்.பிக்கள் வரிசையாக கைது செய்யப்பட்டு வரும் நிலையில், அது அரசியல் பழிவாங்கல் என பரவலாக விமர்சனங்கள் எழுந்து வரும் நிலையில், ஆளுந்தரப்பிற்குள் இருந்தே முதலாவது பகிரங்க கலகக்குரல் எழுந்துள்ளது.

ஜனாதிபதியும் அரசாங்கமும் சரியான பாதையில் சென்றிருந்தாலும், பொலிஸாரும் அவர்களின் விசாரணைகளும் தவறான பாதையில் உள்ளன என்று தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

"ஜனாதிபதியும் அரசாங்கமும் சரியான பாதையில் செல்கின்றன, ஆனால் துரதிர்ஷ்டவசமாக பொலிஸார் மற்றும் விசாரணைகள் தவறான பாதையில் உள்ளன. பொது நிதியை தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் ஊழல் செய்ததற்கான தெளிவான ஆதாரங்களுடன் பல உறுப்பினர்கள் உள்ளனர். பொலிஸ் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் அதன் பின்னால் செல்ல முடியும்.

பொலிஸ் நடவடிக்கைகளுடன் நான் உடன்படவில்லை" என்று அவர் டுவிட் செய்துள்ளார். (ம-3)

# சிங்களவர்களே சுதந்திரத்தை உறுதிப்படுத்துகின்றனர்

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

நாட்டில் வாழும் அனைத்து இன மக்கள் மற்றும் மதங்களின் சுதந்திரத்தை சிங்கள பௌத்த மக்களே உறுதிப்படுத்துகின்றனர் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிங்களவர்கள் முட்டாள்கள் என்று கூறிய யுகம் நவம்பர் 16ஆம் திகதியுடன் முடிவடைந்து விட்டது.

பௌத்த சங்க சபையினர் இதற்கு தலைமையேற்றதை நான் புதிதாக கூறவேண்டியதில்லை. பௌத்த சங்க சபையினரின் வரலாற்றுச் சிறப்புமிக்க பொறுப்பு உச்சளவில் நிறைவேற்றப்பட்டது என்பதை மட்டும் நான் கூறவேண்டும்.

பௌத்த சாசனம், சிங்கள இனம், நாட்டின் ஒருமைப்பாடு ஆகியவற்றை பாதுகாப்பது உட்பட அனைத்தும் ஒன்றோடு ஒன்று பிணையப்பட்டவை. சிங்கள பௌத்தர்கள் பாதுகாக்கப்பட்டால் மட்டுமே ஏனைய மதங்களின் சுதந்திரம் நாட்டில் பாதுகாக்கப் படும் என்பது எமது வரலாற்றில் தெளிவாக காணக்கூடிய ஒன்று.

சிங்கள பௌத்த மக்களே நாட்டில் வாழும் ஏனைய இனங்கள் மற்றும் மதங்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துகின்றனர் எனவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## எதிர்க்கட்சித்...

யாராலும் தடுக்க முடியாது எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் விஜித் விஜயமுனி சொய்சா, சஜித்துக்காகவும் ஐக்கிய தேசிய கட்சிக்காகவும் வீதியில் இறங்கிப் போராடுவதற்கும் தயாராகவுள்ளதாகவும் கூறினார்.

கட்டான பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படவில்லை என்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கைது செய்யப்பட்டார்.

அவர் கைது செய்யப்பட்டதன் பின்னர் பொதுஜன பெரமுனவிலிருக்கும் பலரும் துப்பாக்கிகளை கையளிப்பதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. காரணம் அவர்களும் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்கவில்லை. அவ்வாறெனில் அவர்களும் கைது செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு கடந்த அரசாங்கத்திலிருந்தவர்களை கைது செய்வதற்காக மக்கள் ஆணையை வழங்கவில்லை. மோசடிக்காரர்களுக்கு தண்டனை வழங்குவதற்காகவே மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்தனர்.

எவ்வாறிருப்பினும் எதிர்க்கட்சியில் செயற்படுவதற்கு நாம் அஞ்சப் போவதில்லை என்றும் கூறினார். (ம-3)


மஹஜன சம்பத
திகதி 2020/01/05
சீட்டிழுப்பு இலக்கம் 4085
Z 005968

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 05-01-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2352
I 02 72 77 79

தன நிதானய
திகதி - 2020.01.05
சீட்டிழுப்பு இலக்கம் - 248
P 29 38 47 50

நீரோகா
திகதி 2020/01/05
சீட்டிழுப்பு இலக்கம் 0645
மீனம் 33 43 55 62

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 843
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2020.01.05
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 54,046,815/-
18 31 44 77 V

ஜய
D 15 22 51 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,344,820
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 05/01/2020 வெற்றி வாரம் 2729 வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 08 25 33 57
ரூ. 2,342,974

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1104
சீட்டிழுப்பு திகதி 05.01.2020
R 09 10 66 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 89,506,236

## வேலை வாய்ப்பு

யாழ். நகரில் வேலை செய்யக் கூடிய விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

தொடர்பு :-
**076 7049351**

(1777)

---

புதிய பிரிவுகள் ஆரம்பம்
2020 யூலை பரீட்சைக்கான

**aat (SriLanka)**
(aat1, aat2, aat3)
Qualification :- G.C.E. O/L 6 Passes
Medium – Tamil & English.

Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
0212223382/0212229149

(C-8850)

---

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

கனேடிய சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் கற்கை நிலையத்தில் சர்வதேச, அரச அங்கீகார சான்றிதழுடனான ஹோட்டல் முகாமைத்துவம் மற்றும் சுற்றுலா விருந்தோம்பல் பாடநெறிகளுக் கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை எமது www.cthi.lk இணையத்தளத்தின் ஊடாக அல்லது எமது அலுவலக காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள லாம்.

தொடர்புகளுக்கு :
**Ms.Vani 076 057 9999**
**021 314 6171**
**Canadian Tourism and Hospitality Institute**
**No 1544, K.K.S Road, Kondavil, Jaffna.**

CTHI
CANADIAN TOURISM & HOSPITALITY INSTITUTE

(C-8865)

---

## JOB VACANCY
**Office Assistant-Female**

**Qualifications:**
- 3 Passes in G.C.E A/L
- Age – Between 20-25
- Fluency in English
- Ability to prepare Monthly Accounts & Reports
- Computer Skills

Apply to vconitpark@gmail.com
Closing Date -08.01.2020, VCON IT PARK
**No 603, K.K.S Road, Jaffna.**
**TEL - 021 221 1818, 077 376 7899** (1718)

---

## "சொர்க்கம் திருமண சேவை"

கனடாவில் வாழும் 30, 32 வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறோம், அமெரிக்காவில் வாழும் 30 வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறோம், சுவிஸில் வாழும் 33 வயதுடைய மணமகனுக்கு தகுந்த மண மகளை தேடுகிறோம். **தொடர்புகளுக்கு:0014166661855**
**0014377728129 / 01194762364188**
Website:www.sorkham.com

(C-8866)

---

## வேலை வாய்ப்பு

அரசாங்கத்தின் அனுமதி பெற்ற எமது விளம்பர நிறுவனமான DNMC இன் 2020 ற்குப் புதிய அனுமதிகள். **மேற்பார்வையாளர், முகாமை யாளர், உதவி முகாமையாளர், அலுவலக உதவியாளர்** முதல் 03 மாத பயிற்சியுடன் ஊக்கத் தொகையும் பின் 16500/= - 25000/= பணி நியமனம் வழங்கப்படும்.06 மாத பயிற்சியை நிறைவு செய்து கொள்ளும் அனைவரும் சான்றிதழுடன் மாத வருமானம் 45000/= அதற்கு மேல் பெற முடியும்.

(1730) **076 808 2241 / 076 666 8385**

---

Inner Circle

## NEW YEAR NEW CAREER

இலங்கையில் முன்னணி வகிக்கின்ற No 01 நிறுவனமான Inner Circle (pvt) Ltd இற்கு துடிப்பும் கடினமாக உழைக் கக்கூடிய ஆண், பெண் இருபாலாருக்கும் குறுகிய காலத்தில் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற நினைப்பவர்களுக்கும் மேலதிக கல்வியை தொடர இயலாத இளம் சமுதாயத்திற்கும் அரியதொரு வாய்ப்பு !

வயதெல்லை 18- 26
தகைமை O/L OR A/L
அனுபவம் அவசியமற்றது
பயிற்சியின் போது
24550/=, EPF+ ETF
பயிற்சியின் பின் 45000/=
தங்குமிட வசதியுண்டு

- Administration
- Customer Service
- Supervisor
- Receptionist
- Assistant Managers
- Store Keepers
- Clerks
- Managers

(1776)

**தொடர்புகளுக்கு - 0767707759**

---

## கனடாவில்

3 வருட வேலைவாய்ப்புடன் (WORK PERMIT)
நிரந்தர வதிவிட உரிமை (PERMANENT RESIDENCY)



(C-8785)

A/L சித்தியடைந்தால் போதுமானது!
தனியாகவோ / குடும்பத்தினருடனோ
கனடாவில் குடியேறும் அரிய வாய்ப்பு!

**CANADA MIGRATION PILOT**
V2 Travels ✆ 0768226243

---

## பொருளியல்

**S.JEYAKUMAR**
(B.A (Hons) Econ Spl, M.A (Econ), PGDE)
**A/L 2022, 2020 Day Class**
ஆரம்பம் :- 06.01.2020 திங்கள் 3.00 PM
இடம் : இருபாலை வீதி, கோண்டாவில் (ஐயப்பன் கோவில் அருகில்.)
தொடர்புகளுக்கு : **077 723 8597**

(1689)

---

## ரூ.5 கோடி பெறுமதியான 7 கிலோகிராம் தங்கத்துடன் ஒருவர் கைது

(கொழும்பு)

ஐந்து கோடி ரூபா யுக்கும் அதிக பெறு மதியான தங்கபாளங் களை கடத்த முயற் சித்த ஒருவர் கட்டு நாயக்க விமான நிலை யத்தில் கைது செய்ய பட்டுள்ளார்.

சுங்கப்பிரிவின் புலனாய்வு அதிகாரி கள் வழங்கிய ரக சிய தகவலுக்கமை வாக அவர்கைது செய் யப்பட்டதாக தெரி விக்கப்படுகிறது.

கைதானவரிட மிருந்து ஆறரை கிலோகிராம் நிறை யுடைய 65 தங்கப் பாளங்களை விமான நிலைய சுங்கப் பிரிவின் போதைப் பொருள் தடுப்பு பிரி வினர் கைப்பற்றி யுள்ளனர்.

குறித்த சந்தே கத்திற் குரியவர் விமான நிலைய களஞ்சியசாலையில் பணியாற்றி வந்த 41 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள் ளது. (ம-3)

---

ஸ்ரீ ராம ஜெயம்

### இணுவில் திருப்பதி
### அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலயம்

**சுவர்க்கவாசல் ஏகாதசித் திருவிழா-2020**

**காலம் 06.01.2020 திங்கட்கிழமை**

**06.01.2020 திங்கட்கிழமை**
அதிகாலை 4.30 மணிக்கு சுப்ரபாதம்
**அதிகாலை 5.00 மணிக்கு** கோபூஜை தொடர்ந்து இசையாராதனை
**அதிகாலை 5.50 மணிக்கு** சர்வ சுவர்ண அலங்காரம், விஸ்வரூப தரிசனம், சர்வ உபசாரம், தசதர்சனம், திவ்விய பிரபந்த சமர்ப்பணம், ஸ்ரீ நிவாசர் கருவறையில் இருந்து புறப்பாடு.

ந.ப.12.00 மணிக்கு விசேட பூஜை
மாலை 6.00 மணிக்கு இரவு திருவிழா ஆரம்பம்
மாலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை
மாலை 7.00 மணிக்கு சுவாமி வீதி உலா (நாச்சிமார் சகிதம்)
மாலை 7.30 மணிக்கு ஸ்ரீநிவாசர் கருவறை திரும்புதல் (வீணாகான சமர்ப்பணம்)
அகண்ட நாம பஜனை, தொடர்ந்து நித்திரை விழிப்பு வழிபாடு.

**07.01.2020 அதிகாலை 5.00 மணிக்கு தீர்த்தவாரி, சுவாமி வீதியுலா**
காலை 6.00 மணிக்கு பாரணை அன்னதானம்

**06.01.2020 இசை நிகழ்வுகள்**
இரவு 7.30 மணி நாட்டிய சமர்ப்பணம்- "சாயி ஸ்ருதி" நாட்டியப் பள்ளியினரின் "கிருஷ்ணாவதாரம்" இரவு 8.15 மணி ஸ்ரீநிவாசர், வீணாகான சமர்ப்பணத்துடன் கருவறை திரும்புதல். வழங்குபவர்கள்: சோமராகம் இசை மன்றம்-நல்லூர்

(1716)

**இரவு முழுவதும் நித்திரை விழித்து வழிபாடு செய்வதற்கேற்ப அடியார்களுக்கு ஆலயத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.**

**குறிப்பு:** வைகுந்த ஏகாதசி லக்ஷ்மி நரசிம்ம விஷேட அபிஷேகம், சகஸ்ரநாம அர்ச்சனை செய்ய விரும்பும் அடியார்கள் முற்கூட்டியே காரியாலயத்தில் பதிவுகள் மேற்கொள்ளவும்.

தொலைபேசி இல: 077 725 2476 ஆலய தர்மகர்த்தா ச.கணேசலிங்கம்.

---

## வைத்தியம்

சகலவிதமான நோய்களுக்கும் ஆலோசனை வழங்கப்படும்.
சிகிச்சையளிக்கக்கூடிய நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும்.
மாறாத புண்களுக்கும் மருந்து கட்டப்படும்.

**சென்றல் வைத்தியசாலை**
பிரதானவீதி, உடுப்பிட்டி (புளியடி)
டாக்டர் M.T.கமலசிங்கம் MD (SRILANKA)
Regd No-10341 **0771847230**

(1737)

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: **றாஜ் - 077 679 6623**

(1690)

---

## சாவகச்சேரியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

| | |
|---|---|
| லண்டன் - 540/= | கனடா - 950/= |
| ஜேர்மனி - 640/= | நெதர்லாந்து - 690/= |
| இத்தாலி - 690/= | |

சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.



**076 443 1576**

## அருள்

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

(C-8786)

---

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

**20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்**

## அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576 | சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

✆ 021 222 3536

(C-8786)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.